விலை ரூபா 1-25

# ஈழநாடு

NATIONAL THAMIL DAILY

மலர் 28 சித்திரை 8 ஷஃபா 11 இதழ் 69

யாழ்ப்பாணம் திங்கட்கிழமை 21-4-1986

## கந்தளாய் அணை உடைந்து 100க்குமேலானோர் பலி!

### 18,000 பேர் வீடிழப்பு!

(திருமலையிலிருந்து நமது நிருபர்)

கந்தளாய்க் குளத்தின் அணைக்கட்டு நேற்றுக்காலை உடைப்பெடுத்ததால் 100 க்கு மேற்பட்ட மக்கள் பலியாகியிருக்கலாம் என அஞ்சப்படுகிறது.

கடற்படையைச் சேர்ந்த 200 படகுகளும், ஹெலிகாப்டர்களும் வெள்ளத்தால் சூழப்பட்ட பல ஆயிரக்கணக்கான குடும்பங்களைக் காப்பாற்றும் பணிகளில் தீவிரமாக ஈடுபடுத்தப்பட்டுள்ளன. மேலும் முப்படைகளையும் சேர்ந்தவர்கள் தேடுதல் நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளனர்.

இக்கோர வெள்ளத்தால் 18 ஆயிரத்துக்கு மேற்பட்டவர்கள் வீடுகளை இழந்து அகதிகளாக்கப்பட்டுள்ளனர்.

[5ம் பக்கம் பார்க்க]

# "மீண்டும் யுத்தநிறுத்தத்துக்கு முயற்சிக்கப்போகிறேன்

## அமுல் நடவடிக்கைக்கு இந்திய உதவி வேண்டும்'

### சென்னையில் அமைச்சர் தொண்டமான்

(சென்னை)

இலங்கையின் பாதுகாப்புப் படையினரை அவர்களின் முகாம்களினுள் திருப்பி அனுப்புவதன் மூலம் உறுதியான ஒரு யுத்த நிறுத்த உடன்படிக்கையொன்றை அமுல் படுத்துவதற்கான 'முயற்சிகளைத் தாம் மேற்கொள்ளப்போவதாக கிராமிய கைத்தொழில் அமைச்சர் திரு. எஸ். தொண்டமான் சென்னையில் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

''தமிழர் விடுதலைக் கூட்டணி, தமிழ்ப் போராளிகள், இந்திய அரசாங்கம், தமிழ் நாடு அரசு ஆகியவை இவ்வுடன்படிக்கைகளை அமுல் படுத்தும் முயற்சியில் எனக்கு உறுதியளிக்கவேண்டும். இது வெற்றியளிக்கும் பட்சத்தில ராணுவத்தினரைத் தமது முகாம்களுக்குள் திருப்பியனுப்புமாறு இலங்கை அரசை வற்புறுத்திப் படுகொலைகளை நிறுத்தமுடியும். அத்துடன் தமிழ்ப் போராளிகள் இங்கிருந்து தாக்குதல்களை மேற்கொள்வதை நிறுத்த வேண்டும். வடக்கு, கிழக்கில் சிவில் நிர்வாகத்தை ஏற்படுத்தவும் இது உதவும்

''இ தொ. கா. மீது மாத்திரம் நான் அக்கறைகொள்ள

(5ம் பக்கம் பார்க்க)

### அமைச்சு அறிவிப்பு

(கொழும்பு)

தொண்டமனாறு செல்வசந்நிதி ஆலயத்தில் பத்தர்களை வழமைபோல் தமது கருமங்களை ஆற்றும்படி தேசிய பந்தோபஸ்து அமைச்சு கேட்டுள்ளது.

● பருத்தித்துறையில்

## நேரடி மோதல்: 2 போராளிகள் மரணம்!

[யாழ்ப்பாணம்]

பருத்தித்துறை இராணுவ முகாமிலிருந்து வெளியே வந்த இராணுவத்தினருக்கும் போராளிகளுக்குமிடையில் இடம்பெற்ற நேரடிமோதலில் போராளிகள் தரப்பில் இருவர் பலியானதாகத் தெரிவிக்கப்படுகிறது.

நேற்று நண்பகல் இந்த நேரடிமோதல் சம்பவம் இடம் பெற்றது. இராணுவ தரப்பில் ஏற்பட்டுள்ள சேதவிபரம் பற்றி எதுவும் தெரியவரவில்லை.

இது சம்பந்தமாகத் தமிழீழ விடுதலைப் புலிகள் அறிக்கை ஒன்றை விடுத்துள்ளனர்

அவ்வறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளதாவது: பருத்தித்துறை இராணுவ முகாமிலிருந்து நேற்று நண்பகல் இராணுவத்தினர் இன ஒழிப்பிற்காகப் புறப்பட்டனர் மக்களை அழிக்கும் நோக்குடன் புறப்பட்ட இராணுவத்தினரிடமிருந்து மக்களைப் பாதுகாக்க நேரடி மோதலில் இறங்கிய விடுதலைப் புலிகளில் லெப்டினன்ட் ரமணன், ஜெயம் [பிரேமச்சந்திரன்-வல்வெட்டித்துறை] லெப்டினன்ட் கந்தன், ரவி [எட்மன் சத்தியசீலன் - தும்பளை] ஆகியோர் வீரமரணமடைந்தனர்.

### புலிகள் அஞ்சலி

''மக்களுக்காக வீரமரணமடைந்த இரு தோழர்களுக்கு சிரம்தாழ்த்தி 'வீர அஞ்சலி'யைத் தெரிவிக்கின்றோம்''[மா]

### கொக்காவிலில் பஸ்ஸில் சென்ற இரு இளைஞர் கைது

(ஒட்டுசுட்டான்)

கொக்காவில் இராணுவ முகாமுக்கு முன் பஸ்ஸில் பிரயாணம் செய்து கொண்டிருந்த ஒட்டுசுட்டானிலுள்ள முத்துஐயன்கட்டு ப. நோ. கூ. ச கிளை முகாமையாளர் வேலுவேந்திரராஜா [வயது 23] விசாரணைக்காகக் கைது செய்யப்பட்டுள்ளார் இவருடன் வேறு ஒரு இளைஞரும் கைது செய்யப்பட்டுள்ளார்.

## இலங்கையின் புதிய திட்டம் இன்னமும் பரிசீலனையில்

[புதுடில்லி]

இலங்கையின் இனப்பிரச்னையைத் தீர்ப்பதற்கு இலங்கை அரசாங்கத்தினால் இந்திய அரசிடம் தற்போது சமர்ப்பிக்கப்பட்டுள்ள ஆலோசனைகள் இந்தியத் தரப்பிலிருந்து எவ்விதத் திருப்தியையும் ஏற்படுத்தவில்லையெனத் தெரியவருகின்றது. ஆயினும் இந்த ஆலோசனைகளில் தமிழ மக்களுக்கு ஏற்புடையதான எதனையும் புதிதாக அவர்கள் எதிர்பார்த்திருக்கவில்லையாதலால் இவை எதுவித ஏமாற்றத்தையும் அளிக்கவில்லையாம்

இலங்கை அரசினால் சமர்ப்பிக்கப்பட்டுள்ள இவ்வாலோசனைகளை ஆராய்வதற்காக மூவர்கொண்ட குழு நியமிக்கப்பட்டுள்ளது தெரிந்ததே. இக்குழு இவ்வாலோசனைகளைத் தற்போது மிகவும்கவன

[5ம் பக்கம் பார்க்க]

### சைக்கிளில் சென்றவர் சூட்டுக்குப் பலி!

[மட்டக்களப்பு]

மட்டக்களப்பு மாவட்டத்தில் கொம்மாந்தறையில் ரோந்து சென்ற கொமாண்டோப் பொலிஸார் துப்பாக்கிப் பிரயோகம் செய்ததில் சைக்கிளில் சென்ற ஒருவர் பலியானார்.

நேற்று இச்சம்பவம் இடம் பெற்றது

[5ம் பக்கம் பார்க்க]

## "வடக்கைகட்டுப்பாட்டில்கொண்டுவரமுயல்கிறோம் இராணுவ நடவடிக்கை அவசியமே" அவுஸ்திரேலிய வானொலிக்கு ஜே.ஆர்.பேட்டி

[கொழும்பு]

'இலங்கையின் வடக்குப் பகுதியை மீண்டும் எமது சட்டபாட்டினுள் கொண்டுவருவதற்கான வழிவகைகளை எனது அரசாங்கம் ஆராய்ந்து வருகிறது ஆயினும் இதற்கான ஒரு காலஎல்லை தீர்மானிக்கப்படவில்லை தீவிரவாதம் சம்பந்தமான நடவடிக்கைகளுக்குக் காலஎல்லை நிர்ணயிப்பது இயலாததாகும்''

இவ்வாறு இலங்கை ஜனாதிபதி திரு ஜே ஆர். ஜயவாத்தன, அவுஸ்திரேலிய வானொலி நிலையத்தின் நிருபர் திரு. ஜோன் மில்ஸுக்கு அளித்த பேட்டியொன்றில் கூறியுள்ளார்

### இந்தியாவில் முகாம்கள் உள்ளன

திரு ஜயவர்த்தன தமது பேட்டியில், 'இந்தியாவில் தமிழ்த்தீவிரவாதிகளின் முகாம்கள் உள்ளன. இதனை எம்மால் நிரூபிக்க முடியும்' எனக்கூறினார்.

### இனப் படுகொலை பற்றி...

இந்திய வெளியுறவு அமைச்சர் திரு. பஹத் அண்மையில் லோக்சபாவில் இலங்கையின் பாதுகாப்புப் படைகள், தமிழ்ப் பகுதிகளில் 'இனப் படுகொலையில் ஈடுபட்டுள்ளனர்' எனக் குறிப்பிட்டது பற்றிக் கேட்கப்பட்டபோது, திரு ஜயவர்த்தன, 'திரு. பஹத் இந்தியாவின் பஞ்சாப் மநிலத்தின் நிலையை மனதில் வைத்து இதனைக் கூறியிருப்பார்' எனப் பதிலளித்தார்

### ராணுவ நடவடிக்கை அவசியம்

இலங்கையின் தமிழ்ப் பகுதிகளில் பாதுகாப்புப் படைகளின் நடவடிக்கைகள் தீவிரப் படுத்தப்பட்டால் அப்பாவி மக்களின் கொலைகள் அதிகரிக்கும் எனத் தேசிய பந்தோபஸ்து அமைச்சர் திரு லலித் அத்துலத்முதலி கூறுயிருப்பதுபற்றிக் கேட்கப்பட்டபோது, ''ராணுவ நடவடிக்கைகள் தீவிரப்படுத்தப்பட்டே ஆகவேண்டும். இல்லாவிட்டால் இந்த ராணுவப் பிரச்னையில் தமிழ்த்தீவிரவாதிகள் வென்றுவிடுவார்கள். அவர்களுடையது ஒரு ராணுவப் பிரச்னையாகும். அதைச் சமாளிக்கவேண்டும். இல்லாவிட்டால் நாம் சரணடைய வேண்டிவரும்'' என்றார்.

### அரசியல்தீர்வுகுறித்து..

''எமது அரசியல் சாசனத்தின் பிராந்திய அமைப்பினுள், ஒரு தீர்வினை. ஒரு பொதுஜன வாக்கெடுப்பின்றி வழங்க நாம் தயாராயுள்ளோம் எமது ஒற்றையாட்சி அரசியல் சாசன அமைப்பினுள் எதனையும் —பிராந்திய சபைகள், முதலமைச்சர்கள், அதிகாரப் பரவலாக்கல் எதனையும்—வழங்கத் தயாராயுள்ளோம்.

''பிராந்திய சபைகளுக்கு அதிகாரம் பகிர்தல்பற்றிய

(5ம் பக்கம் பார்க்க)

## வரி விளம்பரம்

### விற்பனைக்கு

NATIONAL 20'' T.V Color AKAI வீடியோ டெக் விற்பனைக்குண்டு, தொடர்பு: S.T.L. வீடியோ கிளப், திருநெல்வேலி. [C 1873]

பூரண விளைதிறனுடைய பம்பாய் வெங்காய விதை விற்பனைக்குண்டு. பிள்ளையார் மெற்றல் வேக்ஸ், 257, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம். [C-1837]

யாழ். வளாகத்துக்கு முன்பாக 2½ பரப்புகாணியும் வீடும் யாழ் பஸ் நிலையத்துக்கு அருகாமையில் ஒரு பரப்பு காணியுடன் களஞ்சியசாலை விற்பனைக்குண்டு. தொடர்பு: ராக்ஸ் அன் அக்கவுண்ரன்சி சேவிஸ், மேல்மாடி, 37 பிரப்பங்குளம் வீதி, வண்ணார்பண்ணை யாழ்ப்பாணம். C-1868

வலம்புரிச்சங்கு - தெய்வீகத் தன்மை வாய்ந்த வலம்புரிச் சங்கு விற்பனைக்குண்டு தொடர்பு: ஸ்ரீ ஆழ்வார்கள் ஆச்சிரமம், ஆயர்பாடி ஒழுங்கை, தெல்லிப்பழை. (C-1891)

Sony T. V. கலர் 14 அங்குலம் புத்தம் புதியது ரூ.8000, இரட்டை மாட்டு கூடாரவில்லு வண்டில் நல்ல நிலையில் ரூ. 5000/- மாலை 3-6 மணி ஸ்கந்தராசா கனகரத்தினம்வீதி, வட்டுக்கோட்டை. C-1888

காரைநகர் வீதியில் பொன்னாலைச் சந்திக்கு அண்மையில் வீதி முகப்புள்ள 12 பரப்புக் காணியும் 1600 சதுரஅடி விஸ்தீரணமும் 3 போஸ் மின்சார இணைப்பு பொருத்தப்பட்ட இரண்டு கட்டடமும் விற்பனைக்குண்டு. ஐஸ்பக்டரிக்கும் இறால் பதனிட்டு ஏற்றுமதி செய்யக் கூடியதும் அரிசி ஆலைக்கும் மற்றும் பாவனைக்கு ஏற்ற உகந்த இடம் தொடர்பு: பொன்னாலைமில்ஸ், பொன்னாலை, C- 1890

### தவறிவிட்டது

செல்லத்துரை மனோகரானந்தம் என்பவருடைய 62ம022390V இலக்கமுடைய அடையாள அட்டை 10-4-86 தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் S. மனோகரானந்தம், அச்சுவேலி வடக்கு என்ற விலாசத்தில் ஒப்படைக்கவும். சன்மானம் வழங்கப்படும். (C 1886)

### CLASSES

Cake making, Icing, Decoration, Sugar flowers, Sugar modelling, General cookery-Indian cookery. Six months course commencing shortly. Spoken English classes for girls. Mrs T Mather, Lawton Road, Manipay, (Near Hindu College). C 1869

வியாபாரம் பெருக விளம்பரம் செய்க


## முதலாண்டு நினைவஞ்சலி



**அன்ரனி விக்ரர் மாட்டீன்**

தோற்றம்: 01-10-1921
மறைவு: 22-04-1985

ஆறாத்துயரில் எம்மை ஆழ்த்தி விட்டு மீளாத் துயில கொண்ட எங்கள் அன்புத் தெய்வமே! எம்மை விட்டுப் பிரிந்து ஓராண்டு சென்றாலும் உம் நினைவுகள் மனதில் என்றென்றும் நிலைத்திருக்கும்

இவரின் ஆன்மசாந்திக்காக யாழ். அடைக்கல அன்னை ஆலயத்தில் [O. L. R]22-4-86 செவ்வாய்க்கிழமை காலை 6-00 மணிக்கு திருப்பலி ஒப்புக்கொடுக்கப்படும். இவரின் ஆன்மா இறைவனில் இளைப்பாற பிரார்த்திக்கிறோம்.

இவரின் பிரிவால் துயருறும்:
அன்பு மனைவி,
மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

157, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.
A 1884

## 5-வது ஆண்டு நினைவஞ்சலி



**திருமதி அ. கமலாதேவி, B A.**
[அபிவிருத்தி உத்தியோகஸ்தர்]

தோற்றம்: 03-01-1948
மறைவு; 15-04-1981

ஆண்டவன் அடியில் நீ அமர்ந்தாண்டு ஐந்தாயினும் தூண்டாநல் மணி விளக்காய்சுடர்ந்தெங்கள் நெஞ்சமெலாம் ஆண்டு நிற்கும் அருமகளே! அக்காளே! குலவிளக்கே! வேண்டுகின்றோம். விழி மழைக்குள் மேன்மையுற உன் ஆன்மா!

இப்படிக்கு,
தாயார், சகோதரன்,
மைத்துனி, சகோதரர்கள்.
சகோதரிகள்,
சிறிய தந்தையார்கள்,
சிறிய தாய்மார்,
மாமன்மார், மாமிமார்,
மச்சான்மார்,
மச்சாள்மார்,
உறவினர்கள்.

'அக்கா அகம்'
இணுவில். C 1889

## யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் இலங்கை

### கணித பீடத்திற்கான அறையினைப் பிரிவீடு செய்தல்

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் உள்ள கணித பீட அறை ஒன்றில் மரத்தினாலும், கண்ணாடியாலும் பிரிவீடு வேலை செய்வதற்கான [Partitioning work] கேள்விகள் தகுதிவாய்ந்த ஒப்பந்தகாரரிடமிருந்து கோரப்படுகின்றன.

ரூபா 100/- கட்டணமாகச் செலுத்தி இதற்கான விளக்கங்களையும் படவரைபுகளையும் வேலைப் பொறியியலாளரிடமிருந்து இம்மாதம் 25ந் தேதிக்கு முன் பெற்றுக்கொள்ளலாம்.

ஒப்பந்தகாரர் யாழ்ப்பாணம் பல்கலைக்கழகத்தில் அல்லது கட்டடத்திணைக்களத்தில் 100,000 ரூபாவிற்கு பதிவு செய்திருத்தல் வேண்டும்.

விண்ணப்பங்கள் அனுப்ப வேண்டிய கடைசித் திகதி 30-04-86 முற்பகல் 10-00 மணி ஆகும்.

விண்ணப்பக் கடிதஉறையின் மேல் மூலையில் YA/PL/02/113 என்ற இலக்கம் குறிப்பிடப்பட்டிருத்தல் வேண்டும்.

பதிவாளர்.
A 599

## பின்னுறுதிக்கட்டளை பற்றிய அறிவித்தல்

**மல்லாகம் மாவட்ட நீதிமன்றத்தில்**

சேச்வீதி சங்கானை காலஞ்சென்ற வீரவாகு சுப்பிரமணியம் என்பவரின் மரணசாதனமில்லா மரணச் சொத்துக்கள் பற்றிய விடயத்தில்
-மரணமெய்தியவர்.

வழ. இல. T. 261
சுப்பிரமணியம் அன்னலட்சுமி, சேச்வீதி, சங்கானை
-மனுதார்.

எதிராக
சுப்பிரமணியம் சிவபாலன், சேச்வீதி, சங்கானை.
- எதிர்மனுதார்.

மேலேயுள்ள இலக்கங்கொண்ட மரணசாதன வழக்கு மேலே பெயர் குறிப்பிடப்பட்ட இறந்துபோனவரின் மரணச்சொத்தை நிருவகிப்பதற்காக மேற்படி நீதிமன்றத்தில் தொடுக்கப்பட்டு, அதில் அதற்கிணங்கப் பின்னுறுதிக் கட்டளை பதியப்பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

அக்கறையுள்ள ஆள் எவரும் 1986 ஆம் ஆண்டு சித்திரை மாதம் 30 ஆந் திகதி காலை 9 மணிக்கு இந்நீதிமன்றத்தின் முன்னர் தோன்றி, அவ்வாறு பதியப்பட்ட பின்னுறுதிக்கட்டளை ஏன் முற்றானதாக்கப்படலாகாதென்பதற்குக் காரணம் காட்டுமாறு இத்தால் தேவைப்படுத்தப்படுகின்றீர்.

நீதிமன்றக் கட்டளைப்படி,
வி. இராமச்சந்திர ஐயர்,
பதிவாளர்.

1986 ஆம் ஆண்டு பங்குனி மாதம் 27 ஆந் நாளாகிய இன்று தேதியிடப்பட்டது.

என்னால் வரையப்பட்டது,
ச. யோகராசா
மனுதாரின் பதிவுபெற்ற சட்டத்தரணி. (C -1841)

## மின்சாரம் கிடைக்கும்

[மாவிட்டபுரம்] தெல்லிப்பழையில் உள்ள பட்டிக்கடவைக் கிராமத்திற்கு விரைவில் மின்சாரம் கிடைக்கவிருக்கிறது. பட்டிக்கடவை கிராமம் பலகாலம் மின்சாரம் இன்றி இருந்ததையடுத்து அப்பகுதி சமாதான சபைத் தலைவர் திரு. சி. இராசலிங்கம்எடுத்தமுயற்சியால்பன்முக வரவுசெலவு திட்டத்தின் கீழ் 50ஆயிரம் ரூபா ஒதுக்கப்பட்டதையடுத்து விரைவில் வேலைகள் ஆரம்பமாகவிருக்கிறது.


## பிரயாண ஒழுங்குகள்

### ஜேர்மனி செல்ல விரும்புகிறீர்களா?

ஜேர்மனியில் தொடர்பு உள்ளவர்களுக்கான நேரடிப் பிரயாண வசதிகள் உடனடியாகச் செய்து தரப்படும்.

மற்றும்

★ எந்தவொரு நாட்டுக்கும் விமானப் பயணச்சீட்டுகள்,
★ இந்தியா செல்வதற்கான விசா, பயணச் சீட்டுகள் என்பன குறைந்த விலையில் பெற்றுத்தரவும்,
★ பாஸ்போட், BONDING முதலிய ஒழுங்குகளும் செய்து தரப்படும்.

உடன் தொடர்பு கொள்ளுங்கள்.
திரு. P. சர்வேஸ்வரன்,
**யூரேலங்கா ரவல்ஸ் லிமிட்டெட்,**
185/1, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
(வின்சர் படமாளிகைக்குமுன் 1-ம் மாடி)
(C 1886)

## தேவை

''ஈழநாடு'' தேசிய தமிழ் தினசரி பத்திரிகையின் உள்ளூர் செய்திசேவைக்கு கீழ் வரும் இடங்களில் கடமை புரிய நிருபர்கள் தேவை:

| | |
|---|---|
| 1. சுன்னாகம் | 5. அச்சுவேலி |
| 2. திருநெல்வேலி | 6. நெல்லியடி |
| 3. வசாவிளான் | 7. ஊர்காவற்றுறை |
| 4. கொடிகாமம் | |

விண்ணப்பதாரிகள் தமிழ், ஆங்கில மொழித் தேர்ச்சி, கல்வித்தகைமை, அனுபவச்சான்றுப் பிரதிகளுடன் வதிவிடத்தை உறுதிப்படுத்தும் கிராமசேவகரின் சான்றிதழ் பிரதியையும் இணைத்து சொந்தக் கையெழுத்தில் விண்ணப்பிக்கவும்.

**விண்ணப்பங்கள் 30-04-1986-ந் திகதி வரை ஏற்றுக்கொள்ளப்படும்.**

விண்ணப்ப மேலுறையின் இடதுபக்க மேல்மூலையில் 'நிருபர் பதவி' என்று குறிப்பிடல் அவசியமாகும்.

முகவரி:
நிர்வாகி,
**ஈழநாடு லிமிட்டெட்,**
த. பெ. இல. 49, யாழ்ப்பாணம்.
(A 602)

## சேவ்ரி ரான்ஸ்போட் ஸ்தாபனத்தாரின் வேண்டுகோள்

07-02-86ல் நுணாவிலில் வைத்து கடத்தப்பட்ட எமது லொறியில் இருந்த பொதுமக்களினுடைய பதினைந்து பேரின் பெறுமதிமிக்க பல பொருள்கள் ஆயுதம் தாங்கிய இனம் தெரியாத நபர்களினால் இறக்கப்பட்டுள்ளன. அப்பொருட்கள் இன்றுவரை கிடைக்கவில்லை.

அப்பொருள்களின் உரியவர்களுக்கு நஷ்டஈடு வழங்கஒழுங்குகள் செய்துகொண்டிருக்கையில்மீண்டும் 07-04-86 இரவு ஏழுமணியளவில் எமதுநிறுவனத்தினுள் நுழைந்த ஆயுதம் தாங்கிய இனந்தெரியாத நபர்கள் ரொக்கப்பணம் ரூபா எண்பத்தொன்பதினாயிரமும் (89,000/-) இரண்டு வாகனங்களும் உட்பட ஐந்தரை லட்சம் ரூபா பெறுமதியான பொருள்களை கொள்ளையடித்துச் சென்றுள்ளனர்.

எங்கள் நிலையை உணர்ந்து பொருள்களை எடுத்தவர்கள் திருப்பி ஒப்படைப்பார்கள் என நம்புகிறோம். இதனால் பல பொதுமக்களின் நிவாரணத்தை நாம் பூர்த்தி செய்துகொள்ள முடியும்.

பொருள்களை எம்மிடம் ஒப்படைப்பவர்களுக்கு சன்மானம் வழங்கப்படும். [A 605]

## "இலங்கை இனப்பிரச்னை தொடர்பாக
# பிரதான இந்திய எதிர்க்கட்சிகள்
# மே 4-ல் கூடி ஆராயும்
# முக்கிய தலைவர்கள் கலந்து கொள்வர்

சென்னை ஏப்-20

**இலங்கை இனப் பிரச்னை குறித்து இந்திய எதிர்க் கட்சிகளை உள்ளடக்கிய மாநாடு ஒன்று அடுத்த மாதம் 4 ம் திகதி மதுரையில் நடைபெறவுள்ளது.**

தமிழ் ஈழ ஆதரவாளர்கள் அமைப்பினால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள இம் மகாநாட்டில் பிரதான இந்திய எதிர்க் கட்சிகள் யாவும் கலந்து கொள்ளவுள்ளன.

இம் மகாநாட்டில் கலந்து கொள்வது குறித்து இதுவரையில் பாரதீய ஜனதாக் கட்சித் தலைவர்களான திரு. வாஜ்போய் லைத் தவிர பஞ்சாப் முதல திரு. மதுதண்டபாத்தே ஆகியோர் தமது சம்மதத்தை த் தெரிவித்துள்ளனர். இவர்க மைச்சர் திரு. சுர்ஜித் சிங் பர்ஞலா, ஆந்திராமுதல்வர் திரு என். டீ ராமராவ் ஆகியோர் இம் மகாநாட்டில் கலந்து கொள்வதற்காக முழு முயற்சி எடுத்து வருவதாக தமிழ் ஈழ ஆதரவாளர் அமைப்பின் தலைவர் திரு. மு. கருணாநிதியிடம் அறிவித்துள்ளனர் (ரா)

---

## உலகச் செய்திகள்

# "'சிம்லா' உடன்படிக்கையை மக்கள் கட்சி ஆதரிக்கிறது'
## — பெனஸிர் அறிவிப்பு!

இஸ்லாமாபாத் ஏப்-20

ஜனநாயக நாடுகள் என்ற அடிப்படையில் இந்தியாவும், பாகிஸ்தானும் தமக்கிடையில் முன்பு செய்து கொண்ட "சிம்லா" உடன்படிக்கையை தமது கட்சி முழுமையாக ஆதரிப்பதாக பாகிஸ்தான் மக்கள் கட்சியின் தற்காலிக தலைவி செல்வி பெனஸிர் பூட்டோ கூறியுள்ளார்.

இஸ்லாமாபாத்தில் நிருபர்கள் மத்தியில் இதனைத் தெரிவித்த செல்வி பெனஸிர் பூட்டோ போர் விலக்க ஒப்பந்தம் அல்லது நட்புறவு ஒப்பந்தம் பற்றிப் பேசாமல நல்லுறவுகள் பற்றிப் பேசுவோம் என்றார்.

இந்தியாவிற்கும், பாகிஸ்தானிற்கும் இடையில் நிலவி வரும் பிரச்னைகளைப் படிப்படியாகத் தீர்க்க முடியும் என்று நம்பிக்கை தெரிவித்த அவர் இவ்வாண்டு இறுதிக்குள் சுதந்திரமான, நியாயமான கட்சி அடிப்படையிலான தேர்தல் நடத்தப்பட வேண்டும் என்றும் வலியுறுத்தினர்.

பாகிஸ்தானில் தேர்தல் நடத்துவது குறித்து அறிவிக்கப்படாவிடில் அடுத்து எடுக்கப்படவேண்டிய நடவடிக்கைகள் குறித்து தமது கட்சி ஆலோசித்து வருவதாகவும் செல்வி பெனஸிர் கூறினர்.

---

## லிபியா மீதான
# விமானத்தாக்குதலை எதிர்த்து
# மேற்குலகில் ஆர்ப்பாட்டம்!

லண்டன் ஏப்-20

லிபியா மீது அமெரிக்கா நடத்திய விமானத் தாக்குதலைக் கண்டிக்கும் வகையில் மேற்கு ஜெர்மனி, பிரிட்டன், சுவீடன், இத்தாலி ஆகிய ஐரோப்பிய நாடுகளில் பல்லாயிரக் கணக்கான மக்கள் ஆர்ப்பாட்ட ஊர்வலத்தில் ஈடுபட்டனர்

ஆர்ப்பாட்ட ஊர்வலத்தில் ஈடுபட்ட பலர் பொலிஸாரினல் கைது செய்யப்பட்டதாகவும் கூறப்படுகிறது.

இது இவ்வாறிருக்க மேற்கு பெய்ரூட்டில் இரு பிரிட்டிஸாரும்ஒருஅமெரிக்கரும்கொல்லப்பட்டதைத் தொடர்ந்து பிரிட்டனைச் சேர்ந்த 50 பேர் உட்பட வெளி நாடுகளைச் சேர்ந்த பலர்பெய்ரூட்தலைநகரைவிட்டு வெளியேறத் தயாராக உள்ளதாகக்கூறப்பட்டது. (ரா)

---

# 'வளைகுடாப்போர்உடனடியாக நிறுத்தப்பட வேண்டும்!"
## அணி சேரா இயக்கம் கோரிக்கை

புதுடில்லி ஏப்- 20

"ஈரான், ஈராக் சகோதரர்களைக் கொன்று குவிக்கும் வளைகுடாப் போர் உடனடியாக நிறுத்தப்பட வேண்டும்" என்று மண்டல சார்பற்ற ஒருங்கிணைப்புக் குழுவின் மந்திரிகள் நிலையிலான மாநாட்டில் வேண்டுகோள் விடுக்கப்பட்டது.

புதுடில்லியில் நடைபெற்ற மேற்படி மாநாட்டிலேயே இந்த வேண்டுகோள் விடுக்கப்பட்டது மாநாட்டின் இறுதியில் தேக்கம் அடைந்திருக்கும் வளர்ந்த,வளரும் நாடுகளுக்கிடையேயான பேச்சுக்களுக்கு வேண்டிய ஆதரவைக் கொடுப்பதற்கான புதிய உத்தியை வகுக்க நிரந்தரக் கமிட்டி ஒன்றை ஏற்படுத்தவும் தீர்மானம் எடுக்கப்பட்டது. (ரா)

---

# இராணுவ சூட்டுக்கிலக்கான ஓர் இளைஞர் மரணம்

(புலோலி)

பருத்தித்துறை நகரில் இராணுவத்தினரின் துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகி மந்திகை அரசினர் வைத்தியசாலைக்குக் கொண்டுவரப்பட்ட இளைஞர் ஒருவர் சிலநிமிடங்களில் மரணமானர் இன்னெரு இளைஞர் காயப்பட்டார் நகரில் ஷெல் குண்டுகளும் விழுந்து வெடித்தன கடந்த 15ம் திகதி பருத்தித்துறை இராணுவ கூட்டுமுகாம் பகுதியிலிருந்து மேற்கொள்ளப்பட்ட துப்பாக்கிப்பிரயோகத்திற்கே இவ் இளைஞர் இலக்கானர்

பருத்தித்துறையைச்சேர்ந்த எஸ். ரவீந்திரராசா [வயது 24] என்பவரே இராணுவத்தினரின் துப்பாக்கிச் சூட்டிற்கு இலக்காகி மரணமானவர் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது இத்துப்பாக்கிப்பிரயோகத்தின்போது இன்னெரு இளைஞரும் காயப்பட்டார் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. துப்பாக்கிப் பிரயோகத்தையடுத்து ஷெல் தாக்குதல்களும் இடம்பெற்றன. பல இடங்களிற் குண்டுகள் விழுந்து வெடித்தன இதனைத் தொடர்ந்து பருத்தித்துறையில் பெரும் பதற்றம் ஏற்பட்டது. சனநடமாட்டமின்றி நகரை அண்மித்த பகுதிகள் காணப்பட்டன. சகல கடைகளும் மூடப்பட்டன.

---

# பண்டிதமணி நினைவாக தனங்கிளப்பு புனரமைப்பு!

[கே. வி. கே. திருலோகமூர்த்தி]

பண்டிதமணி அமரர் சி. கணபதிப்பிள்ளையின் நினைவாக அன்னரது சொந்த இடமாகிய தனங்கிளப்புப் கிராமம் புதுப்பொலிவு பெறவிருக்கிறது இக் கிராமத்தில் பண்டிதமணி ஞாபகார்த்தமாக பல அபிவிருத்தி வேலைகள் ஆரம்பிககப்படவிருக்கின்றன.

இது சம்பந்தமான அமைப்பு வேலைகளில் ஆத்மஜோதி ஆசிரியர் நா. முத்தையா, முன்னாள் சாவகச்சேரிக் கிராமசபைத்தலைவர் திரு. ஆறுமுகம் ஆகியோருடன் பண்டிதமணியின் மாணவர்களும் அபிமானிகளும் ஈடுபட்டுள்ளனர்.

பண்டிதமணியின் தாயார் தனங்கிளப்பு கிராமத்தில் பிறந்து வளர்ந்தவர் எனவும் பண்டிதமணியும் இக் கிராமத்தில் வாழ்ந்து வந்தவர் எனவும் இந்த அமைப்புக்குழுவினர் பத்திரிகையாளரிடம் தெரிவித்தனர்,

பலவழிகளிலும் பின்தங்கிய தனங்கிளப்பு ஒரு விவசாயக் கிராமமாகும் இக் கிராமப் புனரமைப்புக்கு பண்டிதமணி கணபதிப்பிள்ளையின் மாணவர்களும் அபிமானிகளும் ஆதரவு வழங்க வேண்டுமெனவும் இவ் அமைப்புக் குழுவினர் தெரிவித்தனர்

---

# 'குமுதினி' மரணங்களுக்கு நினைவுத் தூபி!

(நெடுந்தீவு)

நெடுந்தீவு குமுதினி படகில் படுகொலைக் ள்ளானவர்களின் நினைவு தினத்தை முன்னிட்டு நினைவுத்தூபி ஒன்றை அமைக்க நெடுந்தீவு பிரஜைகள் குழு நடவடிக்கை எடுத்துள்ளது.

அடுத்த மாதம் 15-ம் திகதி இதற்கான அடிக்கல் நாட்டும் நிகழ்ச்சி இடம்பெறும். நினைவுத்தூபி அமைப்பதற்கான நிதி உதவிகள் பொதுமக்களிடமிருந்து பெறப்படும். தென்னிந்திய திருச்சபையும்போதிய நிதியை வழங்க முன்வரும்என யாழ் தென்னிந்திய திருச்சபை ஆயர் வண. டி. ஜே அம்பலவாணர் தெரிவித்ததாகக் கூறப்படுகிறது மிகவும் கூடுதலான நிதி வசூலாகும் பட்சத்தில் இறந்தவர்களின குடும்பங்களுக்கு நிதி உதவி வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் பிரஜைகள் குழு தெரிவித்துள்ளது.

---

# கந்தளாய்க் குளம் உடைப்பெடுத்தது
## ஆயிரக்கணக்கானேர் பாதிப்பு

[திருகோணமலை]

கந்தளாய்க்குளத்தின் அணைக்கட்டு நேற்றுக்காலை திடீரென உடைப்பெடுத்துள்ளது. பலர் இறந்திருக்கலாமென அஞ்சப்படுகின்றது

சுமார் இருபத்தி நான்கு அடி அணை உடைப்பின் நிமித்தம் ஆயிரத்துக்கு மேற்பட்ட ஏக்கர் காணிகள் முற்றாக நீரில் மூழ்கியுள்ளன. தம்பலகாமம் ரஜஎல ஆகிய கிராமங்கள் இதில் அடங்கும்.

இப்பகுதி முழுதாக வெள்ளக் காடாக இருப்பதுடன் திருகோணமலைக்கடலைநோக்கி வெள்ளம் பாய்ந்த வண்ணம் உள்ளது. ஆயிரக்கணக்கான குடும்பங்கள் நீரில் பாதிக்கப்பட்டுள்ளன. உடைப்பெடுத்த பகுதிக்கு செல்ல முடியாமையினல் மீட்பு வேலைகளை செய்ய முடியாதுள்ளதுடன் கொழும்பு — திருகோணமலை போக்கு வரத்துக்கள் யாவும் முழுதாகப்பாதிக்கப் பட்டுள்ளன. இந்நிலையில் மீட்புப் பணிக்கென திருகோணமலை இராணுவ முகமின் ஹெலிகொப்டர்கள் ஈடுபடுத்தப்பட்டுள்ளன.

சேதம் பற்றிய விபரங்கள் இதுவரை அறியப்படாததுடன் இவ்வுடைப்புக்கான காரணம் பற்றியும் எதுவும் தெரியவில்லை. (ரா)

---

## வாக்குறுதியை மீறுவதாகக் குற்றச்சாட்டு

(டாக்கா)

பங்களாதேஸில் அடுத்த மாதம் நடைபெறவுள்ள பார்லிமென்ட் தேர்தலில் தாம் நடுநிலைமை வகிக்கப்போவதாக கொடுத்த வாக்குறுதியை அரசு மீறிவருவதாக சுதந்திரமான தேர்தலுக்குரிய மக்கள்கமிஷன் குற்றம் சாட்டியுள்ளது.

அரசின் இந்த வாக்குறுதி மீறலுக்கான பதினெரு சம்பவங்களை மக்கள் கமிசன் வெளியிட்டுள்ளது,

இதேவேளை தேர்தலில் ஏற்படக்கூடிய முறைகேடுகளை கண்காணிப்பதற்காக அமைக்கப்பட்ட இந்த அதிகார பூர்வமற்ற கமிஷன் போலியானதே என்று அதிபர் எர்சாத் தெரிவித்துள்ளார். (ரா)

---

## குறைகளை நீக்க வேண்டுகோள்

(யாழ்ப்பாணம்)

அரியாலை ஸ்ரீ கலைமகள் சனசமூக நிலையததினர் தமது பகுதியில் உள்ள மின்சார வசதி, தண்ணீர் வசதி, வீதி செப்பனிடல் போன்ற குறைகளை நிவர்த்தி செய்யும்படி யாழ். மாநகர சபை ஆணையாளர் திரு சீ. வீ. கே. சிவஞானத்தைச் சந்தித்துக் கோரிக்கை வடுத்துள்ளனர். (ஐ)

---

## மட்டுவிலில் ஆச்சிரமம்

(சாவகச்சேரி)

பிரபல ஆயுர்வேத வைத்தியர் வி. சின்னப்புவின் பெரு முயற்சியினல் மட்டுவில்-வடக்கில் ஸ்ரீ சங்கராச்சாரிய ஆச்சிரமம் ஒன்று அண்மையில் ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளது;

சர்வமதங்களுக்கும் பொது இடமாக அமைக்கப்பட்டுள்ள இந்த ஆச்சிரமத்தில் திருப்புகழ் சுவாமியின் அஸ்தி வெள்ளிப் பேழையில் வைக்கப்பட்டுள்ளது.

ஸ்ரீ சங்கராச்சாரியாரின் சீடனுகவிருக்கின்ற டாக்டர் வி. சின்னப்புவினல் கட்டப்பட்ட இந்த ஆச்சிரமத்தில் இந்து, கிறீஸ்தவ, பௌத்த, மதவிக்கிரகங்களும், இஸ்லாமிய மதவாசகங்களும் வைக்கப்பட்டுள்ளன.

இந்த ஆச்சிரமத்தினை,பனம் பொருள் அபிவிருத்தி சபையின் தலைவர். திரு. க. நடராஜா சம்பிரதாய பூர்வமாகத் திறந்து வைத்தார்.

### மணி வாக்கு

ஒருவருக்கு தீய அயலவர் எத்துணை துரதிர்ஷ்டமோ அத்துணை அதிஷ்டம் நல்ல அயலவராலுண்டு.

— ஹெசியட்

## நமதுநோக்கு

# காங்கேசன் வழிகாட்டுகிறது

கே கே எஸ், வீ வீ ரி என்ற விலாசங்கள் இன்று சர்வதேசப் பிரபலம் பெற்றவை. பாக்குநீரிணை இருக்கும் வரைக்கும் இவற்றின் மகிமை குன்ருது.

காங்கேசன் சீமெந்தையும் வல்வெட்டித்துறை கடத்தலையும் நாம் குறிப்பிடவில்லை. வடபகுதி மக்களின் கப்பல் தொழிற் திறமையையும், விடாமுயற்சியையும் இவ்விருதுறைகளும் எடுத்துக்காட்டுகின்றன.

நாமிங்கு குறிப்பிட விரும்புவது காங்கேசனின் கலங்கரை விளக்கம். இது எவரும் சாதாரணமாகக் காணும் நிலையம். ஆனல் அதனை ஆகுபெயராகக் கொண்டு அதன் படம் பொறிக்கப்பட்ட அழகான அட்டை கொண்ட 'காங்கேசன் கல்விமலர்' என்ற நூலே எமது மனத்தைக் கவர்ந்த பொருள்.

யாழ்ப்பாணத்தின் செல்வம் கல்வி, யாழ்ப்பாணத்தின் கல்வி செல்வம்' என்று ஓயாமல் பேசுவதை கேட்டு அலுத்துப் போவதை நாம் உணரமுடிகிறது.

எம்மைப் போல் இந்த 'போரை' முறியடிக்க வேண்டுமென்றுநினைத்தஒரு குழுவினர் செயலில் இறங்கியதால் இன்று இந்த தனிச்சிறப்புற்ற 'காங்கேசன் கல்விமலர்' வெளிவந்திருக்கிறது. காங்கேசன் வரலாறு இதுவென்ருல் மற்றைய தொகுதிகளின் படைப்பு எவ்வாறிருக்கும்? தமிழர் தலைநிமிர வைக்குமென்பது நிச்சயம்.

மாவிட்டபுரக் கோயிலின் கோபுரத்தையும், கடலில் தத்தளிக்கும் கப்பல்களுக்கு வழிகாட்டும் வெளிச்ச வீட்டையும் அட்டை முகப்பில் தாங்கும் மலர் தமிழரின் கல்வி மரபு எவ்வளவு பழமையானதென்பதையும் அதுபற்றி அதிகம் பேசாது அதனை அறிந்து அதற்குத் தகுதியுடையவர்களாக இன்று நாம் என்ன செய்கின்ருேம் என்ற உண்மைக் கதையை வரலாற்று ரீதியில் ஆராய்ச்சிக்குரிய வகையில் சரித்திர நோக்குடன் புள்ளிவிபரங்கள் அடிக்குறிப்புகள் நிரம்பிய அருமருந்தன்ன ஆவணமாக வெளியிட்டிருப்பது பராட்டுக்குரியது.

காங்கேசன் துறைக் கல்வி வட்டார அதிபர் சங்கம் நீண்டகாலம் எடுத்த நன்முயற்சி, போர்க்காலத்தில் பிறந்த ஆண்குழந்தை போல் காட்சியளிக்கிறது. இது தமிழ்ப் பிரதேசங்கள் அனைத்துக்கும் ஒரு எடுத்காட்டு என்று சொல்லவும் வேண்டுமா,

இந்த தனித்துவ பிரசுரத்தில் எங்களைப்பற்றியும் ஒரு சொல் இருக்கிறதா என்று ஆசைப்படுவது பத்திரிகையாளரின் பிறவிக்குணம்.

அந்த ஆசையும் நிறைவேற்றப்பட்டிருப்பதைக் கூர்ந்து படித்தவர்கள் கவனிக்க முடியும். நன்றி கூறும் கடைசிப்பக்கத்தில் கடைசிவரியில் எங்களுக்கும் முக்கிய இடம் அளிக்கப்பட்டிருக்கிறது.

'இம்மலர் மலர்ந்து மணம் வீசுவதற்கு உறுதுணையாயிருந்த அனைவருக்கும் நன்றி' என்ற வசனத்தின் ''உறுதுணையாயிருந்த'' என்ற சொற்ருெடரில்' இருந்த' என்ற பெயரெச்சம்இறந்த காலத்தைக் குறிப்பிட்டபோதும், அது வருங்காலத்தில் நிச்சயமென்பதால் அவ்வாறு அமைந்ததென்று கொள்க.

எந்த மலராயிருந்தாலும் — 'காங்கேசன் கல்விமலர்' உண்மையில் என்றும் மணங்குன்ருதமலர் — எங்கள் உறுதுணையில்லாது, பத்திரிகைக் காற்றுஅடிக்காது மணம் வீசுவதெப்படி?

அன்று யாழ்ப்பாணத்தின் கல்விப்பணிப்பாளராக விருந்த திரு. சிமியாம்பிள்ளையின் ஆதரவில் கேகே எஸ். வட்டாரக் கல்வி அலுவலர் திரு பொ. சிவஞானசுந்தரத்தின் தலைமையில் இயங்கிய ஆசிரியர் குழு, உண்மையில் பாடசாலை ஆசிரியர்களைக் கொண்டதாயிருந்தமையால் அபூர்வ கைங்கரியம் நிறைவேறிற்று என நாம் நம்புகிருேம். நூற்றுக்கணக்கான ஆசிரிய ஒத்துழைப்பு மலரில் மிளிர்கின்றது.

ஆசிரியர்களின் இவ்வித தொண்டு நீரில் உள்ள மீன் போன்று இயற்கையானது. ஆனல்; வட்டாரக்கல்வி அலுவலர் இவ்வித பாரிய முயற்சிக்கு தலைமை தாங்குவது இன்றைய அதிசயங்களில் ஒன்று. இத்தகைய பொறுப்பு நிறைநத ஆவணத்தை உருவாக்கி, கல்லெறிகளிலிருந்து தப்பி உயிர்வாழ எத்துணை முயற்சிமட்டுமல்ல, வீரமும் வேண்டும்.

''வரலாறு எனப்படுவது நிகழ்ச்சிகளின் தொகுப்பன்று. குறித்த நிகழ்ச்சிகளால் சமூகத்தில் ஏற்பட்ட தாக்கத்தின் விளைவைப் பிரதிபலிப்பதேயாகும்'' என்று மலரில் சரியாகக் குறிப்பிடப்பட்டிருக்கிறது. யாழ். பல்கலைக்சழகத்துக்கு உவப்பான பண்டம் பூர்த்தி பெற்றிருக்கிறது.

பொன்னின் குடத்துக்கு நாம் பொட்டிட வேண்டியதில்லை. ஒரேஒரு அச்சம்; அதனை வெளியிட்டேயாக வேண்டும். கடந்த வருட முடிவில், அறியாமையால் நிகழும் போர்மத்தியில், அந்த இந்நூல் அகற்றவல்ல கல்வியின் மரபை இவ்வண்ணம் வெளிப்படுத்தும் இம்மலரால் நாம்பெற்ற இன்பம் பெறமுடியாத தமிழ் பிறவிகள் உண்டோ?

---

### ★ உலக அரசியல் அரங்கு — அரசியல் அவதானி

# சர்வதேச கண்டனம் அமெரிக்காவைத் தனிக்கப்பிடிக்கும்!

## இஸ்ரேலுக்கு ஒரு சட்டம் லிபியாவுக்கு இன்னென்ரு?

### உலக அபிப்பிராயத்தை பிரதிபலிப்பதே என்ஏஎம்

### துரிதப்படுத்தும் நடவடிக்கைகள்

**புதுடில்லி**

அணிசேரா நாடுகளின் அமைச்சர்கள் மாநாடு தக்க நேரத்தில் புதுடில்லியில் கூடியது, கூட்டம் அமெரிக்கா என்ற யானை லிபியாவென்ற; ஆட்டுக் குட்டியைத் தாக்கியதைத் தும்பு பறக்கக் கிழித்திருக்கிறது.

கர்வத்தின் சிகரமாகக் காட்சியளிக்கும் அமெரிக்க ஜனதிபதி இதனைப் பரிகாசம் செய்வது இயற்கை. அமெரிக்க மக்கள் தானும், றீகன் கடாபிக்கு நல்ல பாடம் புகட்டியிருக்கிருரென்று நினைக்கலாம்; வியட்நாம் போரைப் போல கால கதியில் இது அமெரிக்காவின் பலத்தையும் சர்வதேச அமைதியையும் கெடுக்கும் செயலென்று முடிவுக்கு வருவார்கள்.

வியட்நாம் போரை ஒழிக்க வேண்டுமென்ற நிபந்தனையில் நிக்ஸன் இரண்டாவது தடவை ஜனதிபதியாகத் தேர்ந்தெடுக்கப்பட்டது நினைவில் உண்டு

லிபியத் தலைவர் கடாபியின் விடயம் என்னவாயிருந்தபோதும் சர்வதேச பயங்கரவாதத்தின் சிற்பியென்ற அழியாப் 'புகழ் பெற்ற' இஸ்ரேல் கையும் மெய்யுமாகப் பிடி பட்டு, ஐ நா பாதுகாப்புச் சபையில் குற்றவாளி என்று நிறுத்தப்பட்டபோது அதனை முறியடித்து இஸ்ரேலைத் தப்பவைத்தவர் றீகன்.

**இஸ்ரேல்**

இன்று, அமெரிக்காவின் சில 'வால்களைத்' தவிர வேறெவருக்கும் கேர்ணல் கடாபியின் பயங்கரவாத வரலாறு என்னென்று தெரியாது. எனவே இஸ்ரேல் அரபு நாடுகளுக்கும் பாலஸ்தீனியருக்கும் செய்யும் கொடுமைகள் நாகரிக நாடு ஒன்றின் செயலாகக் கருதப்படுவதும் தனிப்பட்ட குரோதத்துக்கு ஒரு சிறு நாட்டில் போர் தொடுப்பதால் பழி வாங்குவதும், அதே போன்ற பண்புடைய செயலா?

அதிகாரப் பித்தால் நிகழும் காட்டுமிராண்டித்தனமென்று சொல்வது பொருந்தாது கேடு வரும்போது மதிகெட்டு வரும் செயலென்பதை அமெரிக்க மக்கள் நேரகாலத்துக்குப் புரிந்து தம்முடைய அருமையான நாட்டைப் பழி பாவத்திலிருந்து பாதுகாப்பார்களாக.

**காட்டர்**

ஈரானியத் தலைநகராகிய தெஹ்ரானில் அகப்பட்ட அமெரிக்கத் தூதரக அதிகாரிகளைச் சுமார் ஒரு வருடம் பொறுமையுடன் பாதுகாத்த முன்னை நாள் ஜனதிபதி ஜிம்மி காட்டரின் அருமையை இன்று உலகைக் கலக்கி வைக்கும் றீகனின் சிறுமை விளக்கி வைக்குகிறது. காட்டர் ஆட்சியில் அமெரிகாவின் சர்வதேச செல்வாக்கு குன்றிவிட்டதென்று வாதாடி, ஆட்சியைக் கைப்பற்றின றீகன், இன்று ரஷ்யாவுடன் மீண்டும் மோதிக் கொள்வதோடு, கடல் பிராந்தியங்கள் அனைத்திலும் காவல் நாய்களை வளர்த்து அவை மூலம் கரையோர நாடுகளின் அமைதி வாழ்வைக் குலைத்து வருகிருர்.

ஐரோப்பாவிலேயே ஆதரவிழந்த அமெரிக்க ஜனதிபதி ஆசிய, ஆபிரிக்க நாடுகளில் மட்டுமல்ல சொந்த தேசத்திலேயே மத்திய, தென் அமெரிக்க நாடுகளின் வெறுப்பைத் திரட்டுகிருர். நிக்கரகுவாவை யுத்தத்தால் அழித்து விடத் தயங்காத றீகனுக்கு காங்கிரஸ் எவ்வித ஆதரவையும் மறுத்துவிட்டது.

றீகனின் ஆலோசகர்கள் கடாபியை ஹிட்லருக்கு ஒப்பிடுவது ஓநாயும் ஆட்டுக்குட்டியும் என்ற கதையைப் போன்றது. அமெரிக்கா லிபியாவைத் தாக்கியது தற்பாதுகாப்புக்காகவென்று உலகம் நம்புமென்று நினைக்கும் றீகனின் கையாட்கள் உலக சமாதானத்தின் முதல் எதிரிகள்.

**லிபியா ஆட்டுக்குட்டியா**

இன்றைய உலகில் லிபியா போன்ற சின்ன நாடுகளைக் கசக்கிப் பிழிந்து விடலாம் என்று நினைக்கும் வல்லரசுகள் விரைவில் வெறும் பூவரசுகளாகப் போகும் சாத்தியம் உலக வரலாறு புகட்டும் பாடம்.

**ஐரோப்பா**

லிபியாவை அமெரிக்கா இரக்கமின்றித் தாக்கியமை, லிபியாவில் பரிதாபத்தை ஏற்படுத்தவில்லை. குறிப்பாக ஐரோப்பிய நாடுகள் அச்சத்தில் ஆழ்ந்திருக்கின்றன. அமெரிக்க ராணுவ தளங்களைக் கொண்ட ஐரோப்பிய நாடுகள் எந்நேரமும் தாக்கப்படலாமென்ற அச்சம் ஒரு புறம், அமெரிக்க ஆதிக்கத்தால் தங்கள் நாடுகளில் அபாயத்தை விலை கொடுத்து வாங்கிவிட்டோமேயென்ற ஏமாற்றம் மறுபுறம்.

**இங்கிலாந்து**

தாட்சரின் இங்கிலாந்து அமெரிக்காவுக்கு வால் பிடிப்பது முன் கூட்டியே தெரிந்த விடயம். பொருளாதாரத்தாலும், ராணுவ பலத்தாலும் குன்றி நிற்கும் பிரிட்டன் ஒரு வல்லரசென்ற அந்தஸ்தை இழக்கலாகாதென்ற நோக்கத்தில் தாட்சர் அமெரிக்காவை வாழ்விலும் தாழ்விலும் அண்டி நிற்பது இயற்கை; ஆனல் பெருமை மிகுந்த பிரிட்டிஷ் மக்களுக்கு தாட்சர் செய்யும் துரோகம், அவரை இலகுவில் தூக்கி எறிய வழி கோலுகிறது. கடந்த இரண்டாவது உலக மகா யுத்தத்தில் அமெரிக்க உதவியை நாடிய பிரதமர் சேர்ச்சில் மிகத் தந்திரமாக சுயமரியாதையை வெளிவிடா வண்ணம் அமெரிக்காவைப் போரில் தங்கள் பக்கம் சேர்த்தார்.

# இந்தியாவின் கொட்டத்தை அடக்கவே 'சார்க்' உதயமானது?

## நாம் ஒன்றை நினைக்க இஸ்லாமிய உலகம் இன்னென்றை நினைக்கலாமல்லவா?

**புதுடில்லி**

ஐ.நா,'நாம்'(NAM)சார்க்- இவையெல்லாம் பிச்சைக்காரக் கூட்டம்; வெடிவால் கிழப்புகின்றன. அமெரிக்கச் செல்வத்தில் அகில உலகுமே ஓடிக் கொண்டிருப்பதாக எண்ணும் இன்றைய பென்டகன் இவற்றை இலகுவில் மதிக்காது யூனெஸ்கோவை நிலைகுலையப் பண்ணிவிட்டது; ஐ. நா. வை முறியடிக்க முயல்கிறது; இதே போன்ற புதிய 'சார்க்' நிறுவனத்தை வாழ்த்த றீகன் தவறவில்லை. ஏன் அங்கு பாகிஷ்தான்,இலங்கை, பங்களாதேஷ் மூன்றும் ஒன்றுபட்டு ''இந்திய ராட்சதனை'' அடிபணிய வைக்கலாமென்ற எண்ணம்.

ராஜதந்திர மந்திரவாதி கிஸிங்கர், இந்து சமுத்திரத்தில் பாகிஸ்தானுக்கே பலமளிக்க வேண்டுமென்று தீர்மானித்தார். மாஷல்லோவில் கிடந்து உளலும் பாகிஸ்தான் ஒருபெரும் 'ராணுவ' அரசானது அசைக்க முடியாத நிலை என்ற அச்சத்தை பரப்பிவருகிறது. அங்குவந்திருக்கும் பெனஸிர் பூட்டோ பிலிப்பைன்ஸின் திருமதிஅக்கிவினொ போல் ஆதிக்கம் பெற்ருல் சீக்கிய பயங்கரவாதமும், இலங்கை ராணுவத்தின் பயங்கரவீனமும் ஒழியவழிபிறக்கும்.

**பிரான்ஸ்:**

பிரான்ஸ்ஸின் புதிய ஆட்சி பெற்ருேர் ஒழுங்கு செய்த விவாகம் போல நடைபெறத் தொடங்கியுள்ளது. காதல் என்ற மணம் குணம் இல்லாத போதும் சோஷலிசக் கட்சி ஜனதிபதியும் வலதுசரிப் பிரதமரும் இழுபறிப்பட்டு வாழ்க்கை நடத்த வேண்டியிருக்கிறது. குடும்பத்தில் நடைபெறுவதுபோல, ஒருவர் மற்றவரை அடக்கிவிட முடியும். நாட்டையும் நாட்டின் நலிந்த மக்களையும் காப்பவன் நானே என்ற பாங்கில் மித்ராண்டர்இறுக்கமாக நிற்கின்ருர். முதலாளித்துவத்திற்கு புத்துயிர்கொடுக்க முயலும் பிரதமர் 'அவசரப்படேல்' என்ற மந்திரத்தில் நம்பிக்கை கொள்ளவேண்டியிருக்கிறது.

ஏனைய ஐரோப்பிய நாடுகளுக்கு முன்மாதிரியாக பிரான்ஸ் அமெரிக்க ஏகாதிபத்தியத்துக்கு இலகுவில் இடமளிக்காது.

**மத்தியகிழக்கு:**

மத்தியதரைக்கடலில் சண்டித்தனை ஆரம்பித்திருக்கும் அமெரிக்கா, மத்தியகிழக்கில் அமைதி காண்பது முயற்கொம்பு. பாலஸ்த்தீனிய விடுதலை இயக்கத்தின் பிரச்னையை சுமுகமாகத் தீர்க்க முடியாத வரையில் இப்பிராந்தியம், பயங்கரவாதத்தின் உறைவிடமாக இருக்கும். அதற்கு இஸ்ரேல் பாதுகாப்பாக இருக்கும். அமெரிக்கா என்றும் அதிகார உச்சியிலிருக்கும் என்று கனவு காண்கிறது இஸ்ரேல்.

## கடைசிநேர வரிவிளம்பரம்

### தேவை

புதிதாகத் தொடங்கும் கூல் பார்-கபேக்கு அனுபவமுள்ள ஆண், பெண் சிப்பந்திகள் தேவை. அத்துடன் கூல் பாருக்குரிய தளபாடம், Deep freezer மற்றும் சாமான்கள் உடனடியாகத் தேவை தொடர்பு:- ச. சிற்றம்பலம், 100/1, ஸ்ரான்லி வீதி (விக்ரேஸ் அருகாமை) யாழ்ப்பாணம்

(C- 1897)


## 1-வது ஆண்டு நினைவஞ்சலி



தர்மராசா
ஐயாத்துரை

அன்னையின் மடியில்:
24-06-1962

ஆண்டவன் அடியில்:
21-04-1985

எங்கள் அன்பு மகனே தர்மராசா எம்மைவிட்டு பிரிந்து ஒரு வருடம் முடிந்தாலும்உமதுநினைவு எங்கள் மனதைவிட்டு அகலாது. உமது ஆத்மா சாந்தியடைய தினமும் பிராத்திக்கிறோம் மகனே.

அன்புத் தந்தை, தாய்,
சகோதரர்கள்
மற்றும் உற்ருர்,
உறவினர், நண்பர்கள்.

கு. ஐயாத்துரை.
உடுப்பிட்டி. C 1893


எம்பயர் திரையில்
10-30, 2-30, 6-45,
சிவாஜி - ரஜனி
நான்
வாழவைப்பேன்

எம்பயர் 'B' சினிமா
EXTERMINATOR II
ATTACK
(New Film)

லிடோ Jaffna
10-30, 2-30, 6-30
சிவாஜி, உஷாநந்தினி
சாரதா, எம்.ஆர்.ஆர்.வாசு
நடித்த
என்னைப்போல்
ஒருவன்
(கலர்)

2வது மாதம்
வெலிங்டன்
10-30, 2-30, 6-15
சிவகுமார், மோகன்
அம்பிகா, கவுண்டமணி
நடித்த
நான் பாடும் பாடல்
(கலர்)


# இரு பெண்போராளிகள் எச்சரித்து விடுவிப்பு

(யாழ்ப்பாணம்)

மக்கள் விடுதலைப்படை உறுப்பினர்களான மன்னார் மாவட்டத்தைச்சேர்ந்த தேவி அம்பிகா ஆகிய இருவரையும் தமது படையிலிருந்து நிரந்தரமாக நீக்கிவிட்டதாக 'ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி' (ஈ பி. ஆர்.எல்.எவ் ) வெளியிட்டுள்ள பிரசுரம் ஒன்றில் குறிப்பிடப்பட்டுள்ளது.

'சொந்த நலன்களை மக்களின் நலன்களுககு கீழ்ப்படுத்துவோம்' என்ற தலைப்பில் இப்பிரசுரம் வெளியிடப்பட்டுள்ளது.

அப்பிரசுரத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

''மேற்குறிப்பிட்ட இருவரும் தவறுவிட்டபோது பல தடவைகள் தெளிவுபடுத்தி விமர்சனம் செய்து திருத்த முயன்ரோம். ஆனலும் இவர்கள் தொடர்ந்துய் சொந்த நலன்களை முதன்மைப்படுத்தியதோடு மக்கள் விடுதலைப்படை ஒழுக்கவிதிகளையும் கட்டுப்பாடுகளையும் மீறி நடந்துள்ளனர். இதனல் இவர்கள் படையிலிருந்து நீக்கப்பட்டனர்.

''தொடர்ந்தும் இவர்கள் எமது ஸ்தாபனத்தின் பெயரைப் பயன்படுத்தி தவறுகள் செய்யும்பட்சத்தில் ஸ்தாபன நலன் கருதி கடுமையான நடவடிக்கை எடுக்க நாம் நிர்ப்பந்திக்கப்படுவோம் என்பதை மக்களுக்கு அறியத்தருகிரோம்.

''மக்கள் விடுதலைப படை உறுப்பினர்களிடையே போர்க்குணமும், மக்களின் நலன்களுக்குச் சேவை செய்யும் மனப்பான்மையும், உருக்குறுதியான ஒழுக்கமும் கட்டுப்பாடும் மிகமிக அவசியமாகும் ஒழுக்கமும், கட்டுப்பாடும், மக்கள் மீது நம்பிக்கையும், நேசமும் கொண்ட படை மட்டுமே எதிரிப் படைகளை வெல்லும் வலிமை கொண்டதாகும்.

''போராட்டத்தின்போக்கில் எந்த ஒரு ஸ்தாபனமும், தனி நபரும் தவறு செய்வது இயல்பானதே. ஆனல் தவறு சுட்டிக்காட்டப்படும்போது தவறை உணர்ந்து திருந்துவதன் மூலமே போராட்டத்தின் மீதான விசுவாசத்தை உறுதிப்படுத்த முடியும்.

''இதேவேளையில்போராட்ட காலகட்டத்திலும் ஒழுக்கக் கேடான நபர்கள் மக்களின் நலனுக்கு எதிராக சொந்த நலன்களைமுதன்மைப்படுத்தும் நபர்கள் பலரை நாம் சந்தித்தேயாகவேண்டும். போராட்டத்தின் உச்சக்கட்டத்தில் இது அதிகரிக்கவும்கூடும் மக்களும், போராளிகளும் விழிப்போடு இருந்து செயல்படுவது மூலமே ஒழுக்கக்கேடான, மக்களின் நலன்களிற்குத் தீங்கன சக்திகளை முளையிலேயே கிள்ளியெறியமுடியும்.''

## மீண்டும்...

[1ம் பக்கத் தொடர்ச்சி]

வில்லை. இலங்கையின் வடக்கு, கிழக்குப் பகுதிகளில் வாழும் தமிழ் மககள் மீதும் நான் கரிசனைகொண்டுள்ளேன் இலங்கையின் இனப்பிரச்னைதொடர்பாக இ. தொ. கா. வின் ஆலோசனைகளை அமுல்படுத்தும்படி எனது செல்வாக்கினைப் பயன்படுத்தி இலங்கை ஜனதிபதியை வற்புறுத்தவுள்ளேன்''. என்ருர்

இலங்கைவாழ் தமிழ் மக்கள் மிகவும் துன்பங்களை அனுபவிக்கிருர்கள் என்றும், அதனல் தமிழ்மக்கள்மீது தான் கொண்டுள்ள கரிசனை அதிகரிப்பதாகவும் கூறிய அவர், இந்நிலை தொடருவதைத் தாம் விரும்பவில்லை எனவும் கூறினர்.

[ய-செ]

## வடக்கை---

(1ம் பக்கத்தொடர்ச்சி)

பிரச்னையே இப்போதுள்ளது. இந்தியாகூடப் பிராந்திய சபைகளுக்கு மேலாகப் போக விரும்பவில்லை.

ஜனதிபதி மேலும் கூறுகையில்,

''வெகுவிரைவில் கிழக்கு மாகாணத்தில் தேர்தல்கள் நடைபெறும். ஆனல் அவை பிராந்திய சபைகளுக்காக வல்ல, தற்போது காலியாகவுள்ள பாராளுமன்றத் தொகுதிகளை நிரப்புவதற்கே நடைபெறும்'' என்ருர். [ய-செ].

## கந்தளாய்...

[1ம் பக்கத் தொடர்ச்சி]

வெள்ளத்தால் மூழ்கியிருந்த கந்தளாய்ப் பிள்ளையார் கோவில் ஐயரின் இரு குழந்தைகளையும் ஹெலிகொப்டர் ஒன்று மீட்டெடுத்த பொழுது ஒரு குழந்தை தவறி நீருள் மூழ்கி மரணமானது. மற்றக் குழந்தை ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டு அங்கு மரணமானது.

கடலைநோக்கி காட்டாறுகப் பாய்ந்து கொண்டிருக்கும் இவ்வெள்ளத்தில் பலியானவர்கள் அடித்துக் சொல்லப்பட்டுள்ளதாக நம்பப்படுகிறது.

மேலும் தங்கள் உயிர்களைக் காப்பாற்றிக் கொள்வதற்காகப்பலர் மரங்களில் ஏறித் தஞ்சம் புகுந்திருக்கின்றனர்.

வெள்ளத்தில் பலியானவர்களுள் சின்னஞ் சிறுர்களும், மற்றும் கால் நடைகளும் அதிகமாக இருக்கலாம் என தெரிவிக்கப்படுகிறது.

நேற்றிரவும் வெள்ளத்தால் பாதிக்கப்பட்டவர்களை மீட்கும் பணி தொடர்ந்து நடைபெற்றுக் கொண்டிருந்தது

(3ம்பக்கமும்பார்க்க)

## இலங்கையின்...

[1ம் பக்கத் தொடர்ச்சி]

மாக ஆராய்ந்துவருகிறது இவ்வாலோசனைகள்பற்றிய தமது கருத்தை இக்குழு இலங்கை ஜனதிபதிக்குத்தெரியப்படுத்துமுன் தமிழ்க் குழுக்களின் தலைவர்களுடன் இதுபற்றிக் கலந்தாலோசிக்கப்படும்.

அண்மையில் இந்தியப் பிரதமரைச் சந்தித்து இலங்கை அரசாங்கத்தின் இப்புதிய ஆலோசனைகளைச் சமர்ப்பித்த இலங்கை வெளிவிவகார அமைச்சர் ஜனப் ஹமீத் இனப் பிரச்னை தொடர்பாக இலங்கை அரசின் எண்ணங்களை ராஜீவுக்கு எடுத்துக்கூறியதாகத் தெரியவருகிறது. ஆயினும் இது ஒரு குறுகிய நேரச் சந்திப்பாக இருந்தபடியினல் எதுவித பிரயோசனமான கருத்துப் பரிமாற்றங்களும் இடம்பெறவில்லை. இவ்வாலோசனைகளைப் பெற்றுக்கொண்ட ராஜீவ் அவற்றைத் தமது உதவியாளர்களிடம் கையளித்துள்ளார் அவை பின்னர் மூவர் கொண்ட இக்குழுவிடம் கையளிக்கப்பட்டன. [ய-செ]


### தையல் கலை வகுப்புக்கள்

தந்தை அல்பிரட் அன்ரனியின் பிரான்ஸ் விஞ்ஞான தையல் கலை வகுப்புக்கள் லயன்ஸ் கழகத்தின் ஆதரவில் நடைபெறுகின்றது.

ஆறு மாதங்களில் சான்றிதழ்கள் வழங்கப்படும்.

வகுப்புக்கள்

செவ்வாய்—புதன் காலை 8-30—3-00 மணிவரை
சனி—ஞாயிறு காலை 8-30—12-00 மணிவரை

தொடர்பு:

கில்னர் மண்டபம், இல. 426, கே. கே. எஸ். வீதி,
யாழ்ப்பாணம். (C 1900)


# தமிழகப்பாடகர் ஜேசுதாஸ் லண்டனில் நுழையத் தடை!

## பாரிஸ் திரும்பினர்

[லண்டனிலிருந்து மாலி]

லண்டன் கவின் கலைமன்றம் ஒழுங்குசெய்திருந்த இசைக்கச்சேரியில் பங்குபற்ற லண்டன் வந்த பிரபல தமிழகப் பாடகர் திரு கே. ஜே. ஜேசுதாஸ், விமான நிலைய அதிகாரிகளினல் லண்டன் நகரினுள் நுழைய அனுமதி மறுக்கப்பட்டார். இதனைத்தொடர்ந்து திரு. ஜேசுதாஸ் பாரிஸ் சென்ருர். திரு. ஜேசுதாஸ், மேற்படி மன்றம் விம்பிள்டன் நகரில் நேற்றுமுன்தினம் ஒழுங்கு செய்திருந்த கச்சேரியில் பங்குபற்றவென விமானம்மூலம் லண்டன் வந்தார். விமான நிலையத்தில் வைத்து அவரைச் சோதனையிட்ட அதிகாரிகள், அவரிடம் தொழில் ரீதியான 'பர்மிட்' இல்லாததினல் நகரினுள் அனுமதிக்க மறுத்துவிட்டனர். இதனையடுத்து பாரிஸ் நகரில் நடைபெறவுள்ள நிகழ்ச்சியொன்றில் பங்குபற்றுவதற்காக திரு. ஜேசுதாஸ் பாரிஸ் சென்ருர்.

திரு. ஜேசுதாஸை லண்டன் நகரினுள் அனுமதிக்க, அங்குள்ள இந்திய உயர் ஸ்தானிகரும், பிரிட்டிஷ் தொழிற்கட்சி உறுப்பினர்களும் முயற்சிசெய்தார்களாயினும் அது கைகூடவில்லையெனத் தெரியவருகிறது. இவரின் கச்சேரியைக் கேட்பதற்காகக் கூடியிருந்த சுமார் 2 000 பேர் ஜேசுதாஸ் அனுமதி மறுக்கப்பட்டார் என அறிந்து ஏமாற்றத்துடன் திரும்பினர்.

வவனியாவில்

# கொள்ளையைக் கண்டித்து நேற்று ஹர்த்தால்

[வவனியா]

வவனியாவில் உள்ள பிரபல முஸ்லிம் வர்த்தகர் ஒருவருடைய இல்லத்தில் இடம் பெற்ற கொள்ளையைக் கண்டித்து நேற்றுமுன்தினம் கடையடைப்புச் செய்த முஸ்லிம் வர்த்தகர்களுக்கு ஆதரவாக நேற்றுவவனியாவிலுள்ளதமிழ் வர்த்தகர்கள் கடையடைப்புச்செய்தனர். இது பூரண ஹர்த்தாலாக அமைந்தது.

ஹர்த்தால் அனுஷ்டிப்பினல் சந்தைகள் கூடவில்லை. தனியார் பஸ் போக்குவரத்துச் சேவைகள் நடைபெறவில்லை. இதனல் வவனியா நகரம் வெறிச்சோடிக் காணப்பட்டது.

இலங்கைப் போக்குவரத்துச் சபை பஸ் வண்டிகள் மாத்திரம் சேவையிலீடுபட்டிருந்த போதிலும், பிரயாணிகள் எவரும் அவற்றில் காணப்படவில்லை

நேற்று அனுஷ்டிக்கப்பட்ட ஹர்த்தால் சம்பந்தமாக 'ஹல்சியாத்'' என்னும் முஸ்லிம் இயக்கமொன்று சுவரொட்டி ஒட்டியிருந்தது.

அச்சுவரொட்டியில், கடந்தசில தினங்களாக இயக்கம் என்ற போர்வையில் பொதுமக்களின் உடைமைகள் கொள்ளையடிக்கப்பட்டுள்ளன என்றும் இதனை எதிர்த்து ஹர்த்தால் அனுஷ்டிப்பு என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. [வா]

நள்ளிரவில்

# உறக்கத்திலிருந்த குடும்பஸ்தர் சுடப்பட்டார்

[கிளிநொச்சி]

கிளிநொச்சி 4-ம் வாய்க்காலில் தேடுதல் நடவடிக்கையின் போது வீட்டில் ஆழ்ந்த உறக்கத்தில் இருந்த குடும்பஸ்தரான எஸ். முத்தையா [40 வயது] என்பவர் இராணுவத் துப்பாக்கிச் சூட்டிற்கு இலக்காகிப் படுகாயமடைந்தார்.

நேற்று முன்தினம் அதிகாலை இரண்டு மணியளவில் இச்சம்பவம் இடம் பெற்றது.

மலையகத்தைச் சேர்ந்த தொழிலாளியான இவர் உடனடியாக கிளிநொச்சி ஆஸ்பத்திரிக்கு எடுத்துவரப்பட்டு சந்திர சிகிச்சை மேற்கொள்ளும் முகமாக யாழ், ஆஸ்பத்திரிக்கு எடுத்துச் செல்லப்பட்டார்.

இதேவேளை கிளிநொச்சியில் இரவு பகலாக தேடுதல்வேட்டைகள் நடைபெற்று வருவது குறிப்பிடத்தக்கது.

## சைக்கிளில்...

[1ம் பக்கத் தொடர்ச்சி]

கொடுவாமடுப் பகுதியில் ரோந்து சென்ற அதிரடிப் பிரிவுப் பொலிஸார், சைக்கிளில் சென்ற ஒருவரைக் கடுமையாகத் தாக்கிவிட்டு கைது செய்து முகாமுக்குக் கொண்டு சென்றனர். [ய-மா

# மரண அறிவித்தல்

S K. சோமசுந்தரம்

பங்கிரானை, இளவாலையைச் சேர்ந்த S. K. சோமசுந்தரம் (இளைப்பாறிய கணக்காளர், உள்நாட்டு அலுவல்கள் அமைச்சு) அவர்கள் சிவபதமடைந்துவிட்டார். இவர் செல்வநாயகியின் அன்புக் கணவரும், பாலேந்திரன் (ஆராய்ச்சியாளர், விவசாயத் திணைக்களம், கண்ணொருவா), குலேந்திரன் (தென் பிராந்திய முகாமையாளர், உப்புக் கூட்டுத்தாபனம், அம்பாந்தோட்டை), மகேந்திரன் (பொறியியலாளர், மின் சாரசபை, வெல்லம்பிட்டியா), வசந்தா ஆகியோரின் அன்புத் தந்தையும், வையகுருநாதன், பஞ்சலிங்கம், தில்லைநாதன், திருமதி தனலக்சுமி சுப்பரமணியம், திருமதி இராசலக்சுமி கந்தையா, திருமதி ஈஸ்வரி ஆரூரன் ஆகியோரின் மைத்துனரும், சோமேஸ்வரன், மனேன்மணி, சாந்தினி ஆகியோரின் மாமனரும், சிவப்பிரியா, சிவதாரிணி, தாக்ஷாயினி, ஹரிஷன், ரம்யா, விஜயசக்தி ஆகியோரின் அன்புப் பேட்டனருமாவார். இவரது ஈமக்கிரியைகள் 22 04-86 செவ்வாய்க்கிழமை காலை 10-00 மணியளவில் இளவாலை, பங்கிரானை குடும்ப மயானத்தில் நடைபெறும்.

மனைவி, பிள்ளைகள்,
மருமக்கள்.

[C-1901]

# இன்றைய பலன்

மாதம்:- சித்திரை 8 (1986-4-21) திங்கள் கிழமை
திதி:- துவாதசி பி. இ. வரை
நக்ஷத்திரம்:- பூரம் பி ப வரை

மேடம்:- பொது ப் பணிகளில் ஈடுபடவிரும்புவீர்கள். குறிப்பாக அரசியல்வாதிகளுக்குப் புதிய ஆர்வம் பிறக்கும். சிலர் புண்ணியஸ்தல யாத்திரையை மேற்கொள்வர்.

இடபம்:- வியாபாரத்துறைகளில் ஈடுபடுபவர்கள் இன்று அதிக முதலீட்டைத் தவிர்த்துக்கொள்ளவும். எதிர்பார்த்த விடயத்தில் நஷ்டம் ஏறபடலாம்.

மிதுனம்:- மந்த நிலையில் வாழ்க்கை சிலரைப் பாதிக்கச் செய்யும். சில விஷமிகளிடம் அகப்படநேரிடும். உறவுமுறைகளில் தடையேற்படும்.

கடகம்:- கடந்தகால நினைவுகளால் இன்பக் சடலில் மூழ்குவீர்கள். இதயத்தில் அமைதி நிலவும். இல்லம் பல்கலைக்கழகமாக மாறும்.

சிங்கம்:- எதிர்பார்த்த முடிவுகள் ஏமாற்றத்தைத் தரும். எதிரிகளின் சூழ்ச்சி பலமாக அமையும். நினைவுகள் தலைதூக்கும். நிதான புத்தி நன்று.

கன்னி:- மாணவர்கள் வாழ்க்கையில் மகிழ்ச்சியான தினம். கல்வித்துறையில் முன்னேற்றம் உண்டு. தாய்வழி உறவு நீடிக்கலாம்.

துலாம்:- எதிலும்முன்னணியில் நிற்பீர்கள். பிறரின் கவனம் உங்கள் மீது செலுத்தப்படும். சொந்தமாகத்தொழில் செய்வதில் ஆர்வம் பிறக்கும்.

விருச்சிகம்:- பகைமூட்டம் வட்டமிடும். வீணை வார்த்தைகளால் மனம் புண்படும். தொழில் துறையில் முட்டுக்கட்டைகள் தோன்றக்கூடும். மனத்திடம் நன்று.

தனுசு:- மக்களால் மகிழ்ச்சி. புதுமையில் நாட்டம். முதியவர் ஒருவரின்உதவி உங்கள் நல்வழியை உருவாக்கும்.

மகரம்:- தொழில் புரியும் இடத்தில் தொல்லைகள் தேறக்கூடும். இதன் மூலப் பொருள் விரயமாகும் மேலதிகாரிகளின் தண்டனைக்கு ஆளாகுவீர்கள்.

கும்பம்:- இறைவழிபாடு மேலிடும். இதயத்தில் அமைதியும் ஏற்படும். பிதாவழி மூலம் நல்ல செய்தியுகிடைக்கும். கல்வியில் முன்னேற்றமுண்டு.

மீனம்:- வாழ்க்கை இன்று மல்லிகைத் தோட்டம் போல் மணம் பரப்பிக்கொண்டிருக்கும். காதல் சிட்டுகளுக்குக் கவர்ச்சிகரமான தினம்.

திருமலை
வே. ரவீந்திரன்

# யாழ். மாவட்டத்துக்கு மாற்றம் பெறும் ஆசிரியர்கள்

[யாழ்ப்பாணம்]

யாழ். மாவட்டத்துக்கு மாற்றம் பெற்றுள்ள ஆசிரியர்களின் விபரத் தொடர்ச்சி வருமாறு;-

51 திருமதி. என். குணரட்ணம் முல்லைத்தீவு 52 திரு. சி. சச்சிதானந்தம் - உடையார்கட்டு, 53, திரு. எம் தியாகராஜா, -முல்லைத்தீவு, 54 திருமதி. கே. அன்னபாக்கியம். - முல்லைத்தீவு, 55. திருமதி. கிருஷ்ணபிள்ளை - புதுக்குடியிருப்பு. 56. செல்வி வி. இமெல்டா - முல்லைத்தீவு 57. சி. சிவநேசன், - விஸ்வமடு. 58. செல்வி பி. மணி - புதுக்குடியிருப்பு. 59. செல்வி. J. யசோதா. - முல்லைத்தீவு, 60. செல்வி, ஆர். ராசமலர், - முல்லைத்தீவு. 61. டீ செல்வரட்ணம், - புதுக்குடியிருப்பு. 62. மேரி வில்லிசா, மண்புரி. 63. திருமதி ஏ. அரசரடணம் - வவனியா. 64. திருமதி சி. பாலதயானந்தன், - வெளிக்குளம் 65. செல்வி. எஸ் கந்தசாமிஐயர் - பூவரசங்குளம்.

66 திருமதி வேநாயகி நாகேசு நெடுங்கேணி, 67 திருமதிஜே. சிவஞதன், வவனியா, 68 வி. குகவேல், வாரிக்குடியூர் 69 திருமதி ஆர். ராஜேஸ்வரி, புளியங்குளம், 70 திரு. என் சண்முகநாதன், மாங்குளம், 71 திருமதி எஸ். சண்முகநாதன், மாங்குளம், 72 திரு. டீ. டாலசுப்பிரமணியம், சேமக்குளம், 73 ஆர் ராஜேஸ்வரன், புளியங்குளம், 74 திருமதி ஏ. குணசிங்கம், நெடுங்கேணி, 75 செல்வி வீ. கனகராஜா, நெடுங்கேணி, 76 திருமதி ஆர் பி ஏ. கபீர், வவனியா, 77 செல்வி எஸ். ஏ சி. தாஸ்லீம்ஸ், வவனியா, 78 ஜனுப் எம். ஏ. ஏ. முத்தலிப், அன்னமடு, 79 எஸ். ரட்ணசிங்கம், புசல்லாவ, 80 திரு சி கிட்ணர் கண்டி, 81 திருமதி எம். வேலாயுதம், பதுரலியாய, 82 திரு. ஏ. தியாகராசா, மாரகம, 83 திருமதி வீ பாலசுந்தரம், மாகோ, 84 திரு எஸ். ஆறுமுகம், வவனியா, 85 திரு. வீ. சுந்தரமூர்த்தி, நுவரேலியா, 86 திருமதி கே. சரோஜினிதேவி நுவரேலியா, 87 திருமதி டீ தவமணி பொகவந்தலாவ, 88 செல்வி டீ தம்பியப்பா, கொட்டகல, 89 திருமதி பி. ராமலிங்கம், லிண்டுல.

## பயிற்றப்பட்ட கணித ஆசிரியர்கள்

90 சீ தவராசா, கண்டி, 91 செல்வி கே. சுப்பிரமணியம், கண்டி, 92 திரு எம் ஜெயக்குமரன், தெல்தொட்ட, 93 திரு ஏ. மாதவராஜா, வத்தளை.
94. திரு. டீ. சிவசுப்பிரமணியம் கொச்சிக்கடை, 95. திரு. டீ. கனகராஜா நீர்கொழும்பு, 96. திரு. எஸ். பாலசுநதரம் நாரம்மல, 97. திருமதி எஸ். விஜயசுந்தரம் பதுளை, 98 திருமதி கே. அரசிங்கம் புத்தளம், 99. திரு. கே. கணேசமூர்த்தி முன்னேஸ்வரம், 100. திரு. கே திரவியநாதன் வவனியா, 101 திரு யூ. பாலரட்ணம் புளியங்குளம், 102. திரு சி சிவகுமாரன் நெடுங்கேணி, 103 திரு. மாகனநாதன் நெடுங்கேணி, 104. திரு கே. வேல்முருகு அநுராதபுரம், 105 திரு, கே. தம்பிமுத்து திருமலை, 106. திரு. ஏ. ஆறுமுகன் சளுவாஞ்சிக்குடி, 107. திரு டீ சோமசுந்தர ஐயர் இயக்கச்சி, 109. திருமதி என். சரவணபவான் கிளிநொச்சி, 109. திரு. எம். கனகசுந்தாம் - கிளிநொச்சி. 110. திரு. என். மகாநாதன் -கிளிநொச்சி. 111. செல்வி. வை. விஜயசமூர்த்தி - கிளநொச்சி 112. திருமதி எல். வைத்தியகுமார் - ஒட்டுசுட்டான். 113 திருமதி எஸ். தியாகலிங்கம் - முல்லைத்தீவு. 114. செல்வி எஸ். ராமநாதர். - முல்லைத்தீவு, 115. திருமதி எஸ். தில்லைவனராஜா, - முள்ளியவளை, 116 திருமதி ஏ. ரவீந்திரன் - மாங்குளம். 117 திரு. எஸ். ராஜவரோதயன் - முல்லைத்தீவு. 118. திரு எஸ் தவராஜா -முள்ளியவளை. 119. திரு, பி கந்தப்பு - ஒட்டுசுட்டான் 120. திரு ஆர் பாலேந்திரன் - வவனிக்குளம் 121. திரு வி. கனகசுந்தரம் - விடத்தல்தீவு. 122 திரு. கே. சிவராஜா - மன்னார்.

(மிகுதி நாளை)

# தேடுதலில் இருவர் பலி!

[கிளிநொச்சி]

உருத்திரபுரம் பகுதியில் இடம்பெற்ற தேடுதல் நடவடிக்கைகளைத் தொடர்ந்து இருவர் துப்பாக்கிச் சூட்டிற்கிலக்காகிப் பலியாகி உள்ளனர். சிவநகர் என்னுமிடத்தில் இச்சம்பவம் இடம்பெற்றது.

இரு தினங்களுக்குமுன் கிளிநொச்சியில் இருந்து சென்ஞோர் இத்தேடுதலில் ஈடுபட்டனர் அதிகாலை முதல் இது மேற்கொள்ளப்பட்டது,

சுமார் 500 பேர் இத்தேடுதல் நடவடிக்கைகளில் ஈடுபட்டதாக அங்கிருந்து கிடைத்த செய்திகள் தெரிவித்தன இவர்கள் சில வாகனங்களையும் கைப்பற்றிக்கொண்டு சென்றதாகவும் கூறப்படுகிறது.


# லனேற்

விளைச்சல் பெருகிட பூச்சிநாசினி







லனேற் திரவமாகவும், நீரில் கரையக் கூடிய கரைசலாகவும் கிடைக்கிறது சோயா, போஞ்சி, மிளகாய், வெண்காயம், தக்காளி, கத்தரி, புகையிலை போன்ற சகல பயிர்களிலும் இலைகள், காய்களைத் தாக்கும் பூச்சிகளை அழித்து உங்கள் பயிர்களைப் பாதுகாத்து அமோகவிளைச்சல் தருகிறது லனேற் பூச்சிநாசினி, லனேற் ஓர் லங்கெம் தயாரிப்பு, இது தரமும் செயற்திறனும் மிக்கது.

ரூ. 37·50 முதல்.

லங்கெம்-விவசாயிகளின் தோழன்.
லங்கெம் சிலோன் லிமிட்டெட்,
760, 762, பேஸ்லைன் வீதி, கொழும்பு-9.
தொலைபேசி: 598292-6.

LANKEM
ලංකෙම් லங்கெம்

JWT LK 1801

லங்கெம் - விவசாயிகளின் தோழன்.

(A 404)

# ''மக்களின் தேவைஎதுவோ அதுவேகூட்டுறவின்நோக்கம்

[மாவிட்டபுரம்]

இன்றைய காலகட்டத்தில் மக்களுக்கு தேவையானது தியாகமும், ஒற்றுமையும் தான். இதேவகையில் ப.நோ. கூட்டுறவு சங்கங்கள் இது போன்ற கிராமோதய மருத்துவ நிலையங்களை அமைக்க உதவவேண்டும்.

இவ்வாறு தெல்லிப்பழை ப. நோ. கூ. சங்கதலைவர் திரு. சி. சிவமகாராசா காங்கேசன்துறை ஒன்றிணைந்த கிராமோதய மருத்துவ நிலைய திறப்பு விழாவில் பேசுகையில் கூறினர்.

காங்கேசன்துறை கிராம சேவையாளர் திரு. மு. கனகநாயகம் தலைமையில் நடந்த மேற்படி விழாவில் அவர் மேலும் பேசுகையில் கூறியதாவது:

''மருத்துவ துறைக்கும் கூட்டுறவு துறைக்கும் என்ன தொடர்பு என கேட்கலாம். கூட்டுறவு சங்கங்கள் தனிய வியாபார நோக்கமுடையதல்ல மக்களின் தேவை அறிந்து செயல்படுவதே இவ் அமைப்பு கல்வி, வைத்தியம், பொருளாதாரம் போன்ற துறைகளில் செயல்பட்டுவருகின்றது. அத்தியாவசியதேவைகளான சுகாதார நிலையங்கள் ப. நோ. கூ. சங்கம் மூலம் நடாத்தப்படவேண்டும். இதனல் இவை சகலரும் பயன்பெறும் வகையில் செயல்படவேண்டியது அவசியம் என்று கூறினர்.

மற்றும் பலர் உரையாற்றினர்கள்.

## பின்னுறுதிக் கட்டளை பற்றிய அறிவித்தல்

### மல்லாக மாவட்ட நீதிமன்றம்

தபால்கந்தோர்வீதி தெல்லிப்பழை காலஞ்சென்ற பாலசுப்பிரமணியம் தவராசாவின் மரணசாதனமில்லா மரணச்சொத்துக்கள் பற்றிய விடயத்தில்

- மரணமெய்தியவர். பாலசுப்பிரமணியம் தவராசா கைம்பெண் கிறிஸ்ரீன் பத்மினி, தபால்காந்தோர்வீதி, தெல்லிப்பழை.

- மனுதார்.

மரணசாதன
நியாயாதிக்க
வழக்கு இல. T. 262

எதிராக

(பராயமற்றவர்)

1. பாலசுப்பிரமணியம் தவராசா மகள் சுஜானி நிருபா
2. பாலசுப்பிரமணியம் தவராசா மகள் டிலானி ரிசாறு
3. பாலசுப்பிரமணியம் தவராசா இரஜீவ் நிஷான்.
4. பிறெட் ஜெயவீரசிங்கம் இரத்தினசிங்கம் கைம்பெண் றூபி ஜெயரஞ்சிதமலர் (1-ம், 2-ம், 3-ம் எதிர்வாதிகளின் சட்டப்பாதுகாவலர்) எல்லோரும் தபால்கந்தோர் வீதி, தெல்லிப்பழை.

- எதிர்வாதிகள்.

மேலேயுள்ள இலக்கம் கொண்ட மரணசாதனவழக்கு மேலே பெயர் குறிப்பிடப்பட்ட இறந்து போனவரின் மரணச்சொத்தை நிருவகிப்பதற்காக மேற்படி நீதிமன்றத்தில் தொடுக்கப்பட்டு அதில் அதற்கிணங்க பின்னுறுதிக் கட்டளை பதியப்பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப்படுகிறது.

அக்கறையுள்ள ஆள் எவரும் 1986ம் ஆண்டு சித்திரைமாதம் 30ந் திகதியன்று காலை 9-00 மணிக்கு இந் நீதிமன்றத்தின் முன் தோன்றி அவ்வாறு பதியப்பட்ட பின்னுறுதிக்கட்டளை ஏன் முற்றானதாக்கப்படலாகாதென்பதற்குக் காரணம்காட்டுமாறு இத்தால் தேவைப்படுத்தப்படுகின்றீர்.

நீதிமன்றக் கட்டளைப்படி,

வி. இராமசந்திர ஐயா
பதிவாளர்.

இன்று 1986 - ம் ஆண்டு பங்குனி மாதம் 27-ந் திகதியிடப்பட்டது.

என்னல் வரையப்பட்டது,
ச.யோகராசா,
மனுதாரின் பதிவுபெற்ற சட்டத்தரணி. (C- 1842)

## அராலியில் கொள்ளையை எதிர்த்து வீதித்தடையும் மறியல் போராட்டமும்

[அராலி]

அராலி வடக்கில் க. இராசதுரை என்பவர் வீட்டில் நடந்துள்ள கொள்ளை தொடர்பாக அப்பகுதி மக்களும் சனசமூக நிலைய உறுப்பினர்களும் ஆர்ப்பாட்டம் வீதித்தடை மறியல் போராட்டம் ஒன்றை நேற்று முன்தினம் நடத்தினர்கள், இதையடுத்து அன்றைய தினம் மாலையில் பொதுக்கூட்டம் ஒன்றும் நடத்தப்பட்டது அறிவொளி சனசமூக நிலையத் தலைவர் திரு. ஆனந்தன் தலைமையில் இக்கூட்டம் நடைபெற்றது

இவர் தலைமை உரையின், போது தமிழ்மக்கள் ஈழவிடுதலை போராளிகளுக்கு மட்டுமே ஆயுதங்களை பாவிக்க அனுமதி வழங்கியுள்ளார்களே ஒழிய கொள்ளையருக்கு நவீன ஆயுதம் பாவிக்க அனுமதி கொடுக்கவில்லை என்று குறிப்பிட்டார். மற்றும் பிரமுகர்கள் பேசுகையில், தொடர்ந்து இதுபோன்ற கொள்ளை தொடராமல் இருப்பதற்கு புனித இயக்கங்கள் மக்களுக்கு பாதுகாப்பு வழங்கவேண்டும் என்று கூட்டத்தில் கேட்டுக் கொண்டார்கள். பொதுவாக பெண்கள் அவமதிக்கப்பட்டதைப்பற்றியே பலரும் கண்டனத்தை தெரிவித்தனர். க. இராசதுரை தனது நான்கு பிள்ளைகளின் எதிர்காலத்தை ஒளிமயமான எதிர்காலமாக அமைப்பதற்கு கொள்ளையில் சம்பந்தப்பட்டவர்கள் அவர் மலேசியா பயணமாவதற்காக வைத்திருந்த தஸ்ஜாவேஜுகளை திரும்ப அவர்களிடம் ஒப்படைக்கும்படி வேண்டுகோள் விடுத்தனர். இந்த மறியல் போராட்டம் ஒருநாள் போராட்டமாகவே முடிவடைந்தது. ஒரு கிழமைக்குள் தீர்வு ஏற்படாத பட்சத்தில் மறுபடியும் மறியல் போராட்டம் தொடரும் எனக் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது.

## நூல் வெளியீடு

[பண்டத்தரிப்பு]

மாதகல் இந்துசமய அபிவிருத்திச்சங்கம் ''பன்னிரு திருமுறைத்திரட்டு'' என்னும் நூலை வெளியிட்டுள்ளது, இதன் வெளியீட்டு விழா கடந்த திங்கட்கிழமை புதுவருடத்தினத்தன்று மாதகல் நுணசை முருகமூர்த்திகோவில் மண்டபத்தில் நடைபெற்றது.

சைவப்புலவர் திரு. நா பொன்னையா இதில் கலந்துகொண்டு ஆசியுரை நிகழ்த்தினர். பதிப்பாசிரியர் பொன் கந்தசாமியிடமிருந்து கோவில் தர்மகர்த்தா திரு. க. பாலசுப்பிரமணியம் முதற் பிரதியைப் பெற்றுக்கொண்டார்.

4-வது ஆண்டு நினைவஞ்சலி



அமரர்
வைத்திலிங்கம்
துரையப்பா
[யாழ்ப்பாணம்
பிரபல வர்த்தகர்]
பழைய வீதி, இருபாலை

மலர்வு: 10-08-1913

அமரத்துவம்: 04-05-1982

உங்கள் ஆத்ம சாந்திக்காக எல்லாம் வல்ல இறைவனை இறைஞ்சுகின்றோம்.

தங்கள் பிரிவால் வாடும்:

மனைவி, மகன்.

''முருகபவனம்''
பழைய வீதி, இருபாலை
கோப்பாய்.

C 1885

## மரம் நாட்டு விழா

(மாவிட்டபுரம்)

மல்லாகம் மக்கள் சுகாதாரக் குழு நிலையத்தில் மரம் நாட்டு விழா அண்மையில் நடைபெற்றது.

டாக்டர் ஆ. சிவபாதம் தலைமையில் நடைபெற்ற இவ் விழாவில் தொழிலதிபர் திரு. க. கனகராஜா பிரதம அதிதியாகக் கலந்து மேற்படி நிலையத்திற்கு அலுமாரி ஒன்றை அன்பளிப்புச் செய்ததுடன் மரக்கன்றுகளையும், சுகாதார நல பிரசுரங்களையும், படுக்கை விரிப்பு துவாய்கள் போன்றவற்றையும் வழங்கினர்.

# நூலகக்கல்வியில் பரிசுத்திட்டம்

[யாழ்ப்பாணம்]

நூலகங்களில் மாணவர்கள் கல்வியறிவை பெற ஊக்குவிப்பதற்காக இலக்கிய நூல்கள் அந்நூல்களை இயற்றிய பெரியார்கள் நூல்களில் இடம் பெறும் முக்கிய செய்திகள் போன்றவற்றில் போட்டிகளை நடாத்தி அதிக புள்ளிகளை பெறும் முதல் மூன்று மாணவர்களுக்கு வெகுமதிகள் வழங்க கல்விப்பணிப்பாளர் முன்வந்துள்ளார்

மேற்படி திட்டத்தினை முன்னேடியாக யாழ்ப்பாணம் வைத்தீஸ்வராக் கல்லூரி மாணவர்கள் மத்தியில் ஆரம்பித்து அவர்களை நூலகக் கல்வியில் ஆர்வம் கொள்ளச் செய்வதெனவும் இத்திட்டம் சரிவர அமுல் செய்யப்படுமானல் யாழ்மாவட்டம் முழுவதுமே இத்திட்டத்தினை அறிமுகப்படுத்துவதென்றும் கல்விப்பணிப்பாளர் தெரிவித்தார்.

இப்போட்டிகளில் முதலிடம் பெறுவோருக்கு ரூபா 250/ம் இரண்டாமிடம் பெறுவோருக்கு ரூபா 150/ம் மூன்றாமிடம் பெறுவோருக்கு ரூபா 100/ம் வழங்கப்படுமென கல்விப்பணிப்பாளர் திரு. எஸ். சுந்தரலிங்கம் தெரிவித்தார்.

# குழந்தை உலகிற்கு நஷ்டம்

[உடுவில்]

''குழந்தைகளுக்கு கல்வி போதிப்பது ஒரு தனிக் கலை. எமது ஆசிரியர் பிள்ளைகளோடு பிள்ளைகளாக சேர்ந்து கதைகள் சொல்லி கல்வி போதிக்கும் திறமைமிக்கவர், அவர் சேவையிலிருந்து இளைப்பாறுவது குழந்தைகள் உலகிற்கு பெரும் நஷ்டமாகும்.''

நவாலி மகாவித்தியாலயத்தில் பிரிவுத் தலைவராக இருந்து சேவையாற்றி அறுபதாவது வயதில் ஓய்வு பெற்றுள்ள திரு எஸ். செல்லையாவுக்கு அளிக்கப்பட்ட பிரியாவிடையில் உரையாற்றிய அதிபர் திரு. செ. கதிர்காமத்தம்பி இவ்வாறு கூறினர்.

ஆசிரியர் திரு. கே. செல்லத்துரை தமது பாராட்டுரையில், ஆசிரியரின் பணிவும், பண்பும் தான் எல்லா அதிபர்களிடமும் அவர் பாராட்டு பெற காரணமாக இருந்தன என்றார்.

ஆசிரியர் திரு. பொ தி. சம்பந்தபிள்ளை திருமதி ஜோசேப் ஆகியோரும் பாராட்டுரை வழங்கினர்.

ஆசிரியர் திரு. எஸ் செல்லையாவுக்கு ஆசிரியர்களும் மாணவர்களும் தேனீர்விருந்து வழங்கியதுடன் பல வெகுமதிகளையும் அன்பளிப்பு செய்தனர்.

## படையினர் கைது செய்த இவ்விருவரையும் விடுவிக்கக் கோரிக்கை

[புலோலி]

கொக்காவிலில் வைத்து இராணுவத்தினரால் கைது செய்யப்பட்ட புலோலி பல்லப்பையைச்சேர்ந்த திரு. வி. குபேந்திரராஜாவையும் திருகோணமலையில் வைத்து கடற்படையினரால் கைதுசெய்யப்பட்ட நல்லூர் அகதிகள் புனர்வாழ்வுச்சபைப் பொறுப்பாளரான அல்வாயைச் சேர்ந்த டாக்டர் வி. சசிதரனையும் விடுதலை செய்ய நடவடிக்கை எடுக்குமாறு பருத்தித்துறை பிரஜைகள் குழு யாழ்ப்பாணம் அரசாங்க அதிபர் திரு. வி. எம். பஞ்சலிங்கத்தைக் கேட்டுள்ளது.

ஒட்டுசுட்டான் ப, நோ. கூ. சங்க எரிபொருள் விற்பனை நிலைய முகாமையாளரான குபேந்திரராசா ஒட்டுசுட்டானிலிருந்து பருத்தித்துறைக்கு பஸ்சில் வந்து கொண்டிருந்த போது கொக்காவில் இராணுவ தடைமுகாமில் வைத்தே இராணுவத்தினரால் கைது செய்யப்பட்டார். சமூக சேவையாளரும், நல்லூர் அகதிகள் புனர்வாழ்வுச் சபைப்பொறுப்பாளருமான டாக்டர் வி. சசிதரன் திருகோணமலையில் வைத்துக் கடற்படையினரால் கைது செய்யப்பட்டார்

புலோலியையும், அல்வாயையும் சேர்ந்த இவ்விருவரினதும் உறவினர்கள் இவ்விருவரையும் விடுதலை செய்ய நடவடிக்கை எடுக்குமாறு பருத்தித்துறை பிரஜைகள் குழுவுக்குப் புகார் செய்ததையடுத்தே பருத்தித்துறை பிரஜைகள் குழுத் தலைவர் பேராசிரியர் வீ. கே கணேசலிங்கம் யாழ்ப்பாணம் அரசாங்க அதிபருடன் தொடர்பு கொண்டுள்ளார்.

## முதலுதவிப் பயிற்சி

(வவனியா)

யாழ். மாவட்ட சர்வோதய நிலையத்தில் சுமார் 50 இளம் தொண்டர்களுக்கு முதலுதவி, போஷாக்குணவு, பாலர் பாடசாலை விடயங்களில் மூன்று நாள் பயிற்சி வகுப்பு ஒன்று நடாத்தப்பட்டுள்ளது.

தெரிவு செய்யப்பட்ட யாழ்.மாவட்ட சர்வோதய தொண்டர்களுக்கு இப்பயிற்சி வகுப்பில் விசேட பயிற்றப்பட்ட விரிவுரையாளர்களினல் பயிற்சி அளிக்கப்பட்டதாக வடபிராந்திய சர்வோதய வெளிக்கள இயக்குனர் திரு, க. கதிரமலை தெரிவித்தார். இப் பயிற்சி வகுப்பின் இறுதி தினத்தன்று தொண்டர்களின் கலை நிகழ்ச்சிகளும் இடம்பெற்றன.

## அணிசேரா மாநாடு சிம்பாப்வேயில்

(புதுடில்லி)

அணிசேரா நாடுகளின் அடுத்த உச்சி மாநாடு சிம்பாப்வேயில் நடைபெறும்.

சிம்பாப்வே தலைநகரில்வரும் செப்டம்பர் மாதம் 1ம் திகதியிலிருந்து 6ம் திகதி வரை நடைபெறும் என்று நேற்று புதுடில்லியில் அறிவிக்கப்பட்டது.

ஈழநாடு
NATIONAL THAMIL DAILY

திங்கட்கிழமை — 21-4-1986

# "அரச பயங்கரவாதத்தினாலேதான் தமிழ் இளைஞர் ஆயுதம் ஏந்தினர்"

## 'துக்ளக்' பத்திரிகைக்கு சந்திரகாசன் பேட்டி

**"அரச பயங்கரவாதம் என்று ஆரம்பிக்கப்பட்டதோ அதன் பின்தான் தமிழ்ப் பகுதிகளில் ஆயுதம் காவுகின்ற சிந்தனை எழும்பியது. 1961-ல் சிலர் மத்தியில் இருந்த அந்தச் சிந்தனை 1972க்குப் பிறகுதான் இளைஞர்கள் மத்தியில் பரவத் தொடங்கியது."**

இவ்வாறு எஸ். ஸி. சந்திரகாசன் 'துக்ளக்' ஆசிரியர் 'சோ'வுக்கு அளித்த பேட்டியில் தெரிவித்துள்ளார்.

அப்பேட்டியில் திரு. எஸ். ஸி. சந்திரகாசன் மேலும் தெரிவித்திருப்பதாவது:-

"முதலில் அரசியல் உரிமைகளைக் கேட்கும்போது இராணுவ ரீதியிலான போராட்டம் இலங்கையில் நடக்கவில்லை முப்பது வருடங்களாக சாத்வீகப் போராட்டம் நடைபெற்றது. இப்போராட்டத்தின் இறுதிக் கட்டத்திலேயே இனக்கொலை ஆரம்பித்ததன் பிரதிபலிப்புத்தான் இராணுவ ரீதியாக இளைஞர்கள் போராட்டத்தில் இறங்கினார்கள்.

எனவே, இராணுவப் போராட்டம் என்பது உரிமைகளைப் பெறுவதற்காக ஆரம்பிக்கப்பட்ட போராட்டமல்ல இராணுவப் போராட்டத்தினையும், இனப் படுகொலையையும் தடுப்பதற்கான ஆயுதம் ஏந்தவேண்டிய ஒரு நிலை இளைஞர்களுக்கு வந்தது.

இனப்படுகொலை ஆரம்பித்த பின்னர்தான் விடுதலைப் போராளிகள் ஆயுதப் போராட்டத்தை ஆரம்பித்து அதனை முன் நடத்திச் சென்றார்கள். பயங்கரவாதம் என்ற ஒரு நிகழ்வு அல்லது ஆயுதம் காவுகின்ற சிந்தனை வந்ததன் காரணம், மக்களுடைய அபிலாஷைகளை ஜனநாயக ரீதியாக வெளிப்படுத்த முடியாமல் கட்டுப்படுத்தப்பட்டதன் பிரதிபலிப்புத்தான். நான் இளைஞனாக இருந்த காலத்தில் நானே என்னுடைய கையில் கைக்குண்டு எடுத்துச் சென்றபோது கைதுசெய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டேன்.

**எங்கள் அணுகுமுறை**

எங்களுடைய அணுகுமுறை இலங்கையில் நடக்கும் இனப் படுகொலை என்ற அம்சத்தை இந்தியா மனிதாபிமான காரணங்களுக்கான ஒரு படையெடுப்பை நடத்தி நிறுத்த வேண்டும் என்ற அணுகுமுறையிலேயே நாங்கள் அதற்கான ஒரு தீர்வைக் காண்கின்றோம். அரசியல் சிவில் உரிமைகள் தொடர்பான ஐக்கியநாடுகள் சபையின் கோட்பாட்டை இலங்கை அரசு ஏற்றுக்கொண்டுள்ளது. அந்தக் கோட்பாட்டை ஏற்றுக்கொண்ட காரணத்தினாலே மனிதாபிமான அடிப்படையிலான இராணுவத் தலையீடு நடந்து முடிந்த பின்னர்தான் இந்திய அரசு ஐ நா. ஸ்தாபனத்தையோ, அல்லது ஒரு பொது ஸ்தாபனத்தையோ இலங்கையில் ஒரு சர்வசனவாக்கெடுப்பு நடத்த அழைக்கலாம். அதில் தமிழ் மக்கள் தங்கள் முடிவுகளைத் தெரியப்படுத்தினால் நியாய ரீதியாகவும், சட்ட ரீதியாகவும் அவர்கள் இலங்கையில் தமிழ் மக்களுக்கு அந்த நாட்டை அமைத்துக்கொடுக்க வேண்டுமென்பதுதான் ஒரு முடிவான தீர்வாக இருக்குமென நாம் கருதுகிறோம்."

சமீபத்தில் கொலைசெய்யப்பட்ட பாராளுமன்ற உறுப்பினர்களின் கொலைச் சம்பவங்களைக் கண்டிக்கிறோம். அது குற்றமான ஒரு செயல். அரசியற் கருத்துவேறுபாட்டிற்காக அவர்களை அழித்திருக்கிறார்கள் என்று ஏற்றுக்கொள்கின்றோம் என்று திரு எஸ். ஸி. சந்திரகாசன் அப்பேட்டியில் கூறியுள்ளார்.

[நாளை தொடரும்]

---

### "ஒடுக்கப்பட்ட மக்களுக்கு விடுக்கப்பட்ட சவால்"

[யாழ்ப்பாணம்]

"லிபிய நாட்டின் மீதான அமெரிக்க விமானத் தாக்குதல், உலகில் வாழும் அடக்கி ஒடுக்கப்பட்ட மக்களுக்கு விடப்பட்ட சவாலாகும்."

லிபியா மீதான தாக்குதல் பற்றி அண்ணா தி மு க பொதுச்செயலர் பொன் மதிமுகராசா வெளியிட்டுள்ள அறிக்கையில் இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

அமெரிக்காவின் இச்செயல் மத்திய கிழக்கு நாடுகளுக்கும் உலக சமாதானத்திற்கும் விடுக்கப்பட்ட எச்சரிக்கை மணியாகும் என அவ்வறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

---

## மீன்பிடிக்கச் சென்ற இரு மீனவர் கதி என்ன?

(பச்சிலைப்பள்ளி)

கடலில் மீன் பிடிக்கச் சென்ற இரு மீனவர்கள் ஒரு வாரத்திற்கு மேலாகியும் கரை திரும்பவில்லை.

அவுட் மோட்டார் இயந்திரம் பொருத்தப்பட்ட படகில் சென்ற இவ் இரு மீனவர்களுக்கும் என்ன நடந்தது எனத் தெரிந்து கொள்ள முடியாதிருக்கும் அவர்களது உறவினர்கள் ஆழ்ந்த துயரமடைந்துள்ளார்கள்

கடந்த 11ம் திகதி வெள்ளிக்கிழமை பருத்தித்துறை கிழக்கில் உள்ள மருதங்கேணி என்னுமிடத்திலிருந்து, அப் பகுதியைச் சேர்ந்த பெஞ்சமின், திருச்செல்வம் ஆகிய இரு மீனவர்களுமே கடலில் மீன்பிடிக்க சென்றவர்களாவார்கள்.

அத்தவேளை இப் பகுதிக் கடலில் மீன் பிடிக்கச் சென்ற வேறு ஒரு படகு மீது தாக்குதல் மேற் கொள்ளப்பட்ட போது அப் படகில் சென்ற இரு மீனவர்கள் கடலில் குதித்து நீந்தி வேறு ஒரு படகின் துணையோடு கரை திரும்பியதாகவும் தெரிய வருகிறது.

---

## தமிழகத்தில் அகதிகள் கடத்தல்: மூவர் கைது

[சென்னை]

தமிழ்நாடு கோட்டப்பட்டு அகதிகள் முகாமிலிருந்து இரு இலங்கை அகதிகளும் திருச்சியில் ஒரு இலங்கையரும் கடத்தப்பட்டது சம்பந்தமாகச் சந்தேகத்தின் பேரில் மூவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

பாவா [19 வயது], ரகு [23 வயது], பிரசாத் (25 வயது) ஆகிய மூவருமே கைது செய்யப்பட்டவர்களாவர்.

---

## அறுவரில் ஐவர் விடுதலை

[பூநகரி]

பூநகரி இராணுவத்தினரால் கைது செய்யப்பட்ட அறுவரில் இராமலிங்கம் - சந்திரபாமா ஒருவரைத் தவிர ஐவரும் விடுதலையாயினர். விடுதலையானவர்கள் மிகுந்த சித்திரவதைக்குள்ளானதாக தெரிய வருகிறது.

விடுதலை பெறாத இ. சந்திரபாமாவின் பெற்றோர் பூநகரி பிரஜைகள் குழுவிற்கு முறையிட்டுள்ளனர். பூநகரி பிரஜைகள் குழு யாழ் அரச அதிபர், யாழ் பிரஜைகள் குழு முதலானோரோடு தொடர்பு கொண்டு நடவடிக்கை எடுத்து வருகிறது.

---

## ட்றக்கை ராணுவம் கைப்பற்றியது

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு நோக்கிச் சென்று கொண்டிருந்த (ஈ. எல். எவ்.) ட்றக் ஒன்றின் மீது 3 ம் கட்டைச் சந்தியில் வைத்து இராணுவத்தினர் துப்பாக்கிப் பிரயோகம் செய்ததைத் தொடர்ந்து ட்றக்கில் பிரயாணம் செய்து கொண்டிருந்த நால்வர் தப்பிச் சென்று விட்டனர். வாகனத்தை இராணுவத்தினர் கைப்பற்றிச் சென்றனர். இதனால் சிறிது நேரம் சிலாவத்தைப் பகுதியில் பதற்றம் நிலவியது. இச் சம்பவம் கடந்த வெள்ளியன்று நடைபெற்றது.

---

## மரண அறிவித்தல்

### திரு. தருமர் காசிநாதன்

புத்தூரைப் பிறப்பிடமாகக்கொண்டவரும், சரசாலை வாசியும், வரணி மகா வித்தியாலயம், மீசாலை வீரசிங்கம் மகா வித்தியாலயம், சாவகச்சேரி மகளிர் மகா வித்தியாலயம், மட்டுவில் மகா வித்தியாலயம் ஆகியவற்றின் முன்னாள் அதிபரும், இலங்கைத் தமிழர் ஆசிரிய சங்க யாழ் மாவட்ட தலைவருமான தருமர் காசிநாதன் அவர்கள் 20 04-1986 ஞாயிற்றுக்கிழமை அன்னாரில்லத்தில் இயற்கை எய்தினார். அன்னார் மகேஸ்வரியின் அன்புக்கணவரும், முரளீதரன், விமலன் ஆகியோரின் அன்புத்தந்தையும், ஐயாத்துரை, பரமகுரு, வன்னியசிங்கம், தெய்வானைப்பிள்ளை, காலஞ்சென்ற தம்பையா அவர்களின் அன்புச்சகோதரரும், சிவசுப்பிரமணியம் [எழுதுவினைஞர், வவுனியா மாவட்ட வன இலாகாப் பகுதி], சிவஞானம் [இளைப்பாறிய உதவிப் பொலிஸ் இன்ஸ்பெக்டர்] ஆகியோரின் மைத்துனருமாவார்.

அன்னாரின் ஈமக்கிரியை 21-04-1986 திங்கட்கிழமை பி. ப. 3-00 மணியளவில் சரசாலை கொம்பிகுளம் மயானத்தில் நடைபெறும். (C 1896)

### திரு. சி. செல்லத்துரை
(இளைப்பாறிய P. W. D. ஓவசியர் - தியத்தலாவை)

சின்னையா செல்லத்துரை 19-04-86ல் காலமானார். இவர் காலஞ்சென்ற திருமதி சரஸ்வதியின் அன்புக் கணவரும், ஜெகேஸ்வரன் (நீர்ப்பாசன இலாகா, முருங்கன்), ஜெகேந்திராதேவி (U. K.), யடேந்திராதேவன் (நீர் விநியோக வடிகால் அமைப்புச் சபை), ஜெகேநதிரன் (சவூதி) ஆகியோரின் அன்புத் தந்தையாரும், பத்மலீலா (காங்கேசன் சிமெந்துக் கூட்டுத்தாபனம்), Dr. பரமநாதன் (U K.), ஞானம்பிகை, இந்திரா ஆகியோரின் அன்பு மாமனாரும், தீபன், குமணா, ஜெகதீசன், ஜெயரூபி, ஜெயராம் ஆகியோரின் அன்புப் பாட்டனுருமாவார். அன்னாரின் ஈமக்கிரியைகள் திருநெல்வேலி, ஆடியபாத வீதியில் உள்ள அன்னாரது இல்லத்தில் இன்று (21-04-86) திங்கட்கிழமை பிற்பகல் 2-00 மணியளவில் நடைபெற்று தகனக்கிரியைக்காகத் திருநெல்வேலி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் தயவுசெய்து ஏற்றுக் கொள்ளவும்.

[C-1892] தகவல்: செ. ஜெகேஸ்வரன், செ. யடேந்திராதேவன்.

---

## மரண அறிவித்தல்

### செகராசசிங்கம் செல்லப்பா

செகராசசிங்கம் செல்லப்பா காலமானார். அன்னார் சந்திரவதியின் அன்புக்கணவரும், சுமங்கலா, சுபத்திரா ஆகியோரின் அன்புத் தந்தையும், காலஞ்சென்ற இராஜகாரியர் சுவாமிநாதன், திருமதி பகவதி சுவாமிநாதன் ஆகியோரின் மருமகனுமாவார். அன்னாரின் ஈமக்கிரியைகள் இன்று [21-4-86] காலை 9 மணியளவில் மானிப்பாயில் நடைபெறும். இத்தகவலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

[C 1899] தகவல்: சு தர்மசீலன்.

### திருமதி பவளம் இளையதம்பி [கொக்குவில்]

திருமதி பவளம் இளையதம்பி காலமானார். இவர் காலஞ்சென்ற இளையதம்பியின் அன்பு மனைவியும், அழகம்மா, பேராசிரியர் பாலசுப்பிரமணியம் [Papua New Guinnie] பாக்கியம், பத்மா ஆகியோரின் தாயாரும், திருச்செல்வம், காலஞ்சென்ற கனகலிங்கம், சுவாமிநாதன் ஆகியோரின் மாமியாரும் ஆவார். அன்னாரின் மரணச்சடங்குகள் 121/1, அரசடி வீதி, கந்தர்மடத்தில் 20-4-86 ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் நடைபெற்று கொக்குவில் மயானத்தில் தகனம் செய்யப்பட்டது என்பதை உற்றார், உறவினர், நண்பர்களுக்கு அறியத்தருகிறேன்.

(C-1894) தகவல்: மா. திருச்செல்வம்.

### ஆபேல் (இராசையா) - ஊறணி

ஆபேல் இராசையா 20-04-86ல் காலமானார். இவர் குணமணியின் அன்புக் கணவரும், செல்வநாதர் (உப தபால் அதிபர், ஊறணிக்கரை, காங்கேசன் துறை), புஸ்பநாதர் (உதவி அரசாங்க அதிபர் காரியாலயம், தெல்லிப்பழை), அ..சநாதர் (லிபியா), மேரிஸ் ரெலா, றூபநாதன், மேரி நோயெலா, மேரி நிர்மலா திருக்குடும்பக் கன்னியர் மடம், இளவாலை) ஆகியோரின் அன்புத் தந்தையும், மேரி அன்ரனி (திரவியம்), பிலேமினா, வசந்தலீலா (பேபி) ஆகியோரின் அன்பு மாமனாரும், அன்ரனி லியோவின் அன்புப் பேரனுமாவார். அன்னாரின் நல்லடக்கம் ஊறணி காங்கேசன்துறை புனித அந்தோனியார் சேமக்காலையில் 21-04-86 (இன்று) பிற்பகல் 5-00 மணிக்கு நடைபெறும். இத்தகவலை உற்றார் உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளும்படி வேண்டுகிறோம்.

[C-1898] மக்கள்.

---

இப்பத்திரிகை "ஈழநாடு" லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம சிவன் கோவில் மேற்கு வீதி, 63-ம் இலக்க அச்சகத்தில் 1986-ம் ஆண்டு சித்திரை மாதம் 21-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது. Registered as a News Paper at the General Post Office Sri Lanka under number B 1003/81 Eelanadu P. O. Box 49. Telegram, Eelanadu, Telephone, 22389,
84126